ஞானசம்பந்தம்

தருமை ஆதீனத் திங்கள் இதழ்

மலர் 49] சுக்கில ஆண்டு மாசித்திங்கள் 10—3—90 [இதழ் 4

திருக்கயிலாய பரம்பரைத் தருமை ஆதீனம்

ஸ்ரீ ஆனந்தபரவசர் பூங்காவில் எழுந்தருளி அருள்வழங்கும்

ஸ்ரீ வனதுர்க்காதேவி

வசந்த நவராத்திரி விழா

27—3—90 முதல் தொடர்ந்து 3—4—90 வரை நடைபெறும்.

தருமையாதீனக் குருமுதல்வர்

ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்த சுவாமிகள்

உ

குருபாதம்

ஸ்ரீ குருஞானசம்பந்தர்

அருள்வாக்கு

உன்னுருவங் கண்டிருப்ப
தேசகெட்டேன் முத்திசிவன்
தன்னுருவங் கண்டிருக்கத்
தக்கதே — முன்னறிஞர்
ஓது சிவன்தோற்ற
மொன்றுமே காண்பரெனும்
போத மறந்தனையிப் போது.

— முத்திநிச்சயம் 8

ஆசிரியர் :-

வித்துவான்
இராமலிங்கத் தம்பிரான்
சுவாமிகள்

துணையாசிரியர் :-

மகாவித்துவான்
சி. அருணைவடிவேல்
முதலியார்

உ

குருபாதம்

ஞானசம்பந்தம்

தருமையாதீனத் திங்கள் இதழ்

மலர் 49 | 10-3-90 | இதழ் 4

உட்பொருள்

எண்		பக்கம்
1	அணைகட்டிக்காக்க ஆர்த்தெழுவீர் !	... 161
2	தருமை ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்கள் வழங்கிய ஆசியுரை	... 166
3	செந்தமிழ்போல் ஓங்கும் சிறந்து !	... 176
4	இன்றைய வாழ்விற்குக் கம்பராமாயணம்	... 177
5	காவியத்தில் திருப்புமுனைகள்	... 182
6	மணிக்கடலில் முகந்த சில முத்துக்கள்	... 187
7	குறிஞ்சிப் பாட்டில் மெய்யுணர்வு	... 190
8	முக்கனி	... 193
9	கழற்சிங்கர், இடங்கழியார், செருத்துணையார்	... 195
10	செய்திகள்	... 201
11	எதிர்காலம்	— 204
12	Gnanasambandam Magazine	... 208
13	இதழ்வழிச் சைவசமயக் கல்வி VI. பாடம் - 1	... 209

உ
குருபாதம்

ஞானசம்பந்தம்

மலர் 49 ★ இதழ் 4

தருமை ஆதீனத் திங்கள் இதழ்

சுக்கில – மாசி – 10—3—1990.

பொன்தயங் கிலங்கொளிந் நலங்குளிர்ந்த புன்சடை
பின்தயங்க ஆடுவாய்! பிஞ்ஞகா! பிறப்பிலீ!
கொன்றையம் முடியினாய்! கூடல்ஆல வாயிலாய்!
நின்தயங்கி யாடலே நினைப்பதே நியமமே.

— திருஞானசம்பந்தர்.

அணைகட்டிக்காக்க ஆர்த்தெழுவீர்!

ஒரு நினைவூட்டல் :

"ஞானசம்பந்தம்" 'இந்து மத வளர்ச்சிக்கு விழித்தெழுவீர்' என இந்துப் பெருமக்களுக்கு 1990 ஜனவரி இதழ், தலையங்கத்தில் எச்சரிக்கையோடு கூடிய வேண்டுகோளை முன்வைத்தது. நமது தொல்பெருஞ் சமயத்தின் வளர்ச்சிக் குறைபாட்டுக்கு மூன்று காரணங்களை அத்தலையங்கத்தில் பொதுவாகச் சுட்டியிருந்தோம். அவை: ஒன்று; இந்துமதத்தினரின் சமயஊற்றமின்மை. இரண்டு: இந்து சமயத்தவர் மதம் மாறிப் பிற சமயங்களில் சேர்வதைக் கட்டுப்படுத்த முயலாமை. மூன்று; ஆட்சியாளர்களின், இந்துமத வளர்ச்சிக்கு எதிரானசெயற்பாடுகள். முதற்காரணத்தைபிப்ரவரி இதழில் 'இந்துப் பெருமக்களே விழிமின்! எழுமின்' எனத் தலையங்கம் வாயிலாக விரிவாக ஆராய்ந்து வெளிப்படுத்தினோம். முற்குறித்தவாறு, இவ்விதழில், மதமாற்ற முயற்சிகளையும், அவற்றை முறியடிக்க வேண்டிய இந்துப் பெருமக்களின் தலையாய கடமையையும், பரிவுணர்வோடும், எச்சரிக்கை உணர்வோடும் வெளிப்படுத்துகின்றோம்.

நமது சகிப்புத்தன்மை !

உலகசமயங்கள் பலவற்றுள்ளும் சகிப்புத்தன்மையும், உயரிய மனித நேயமும் மிக்கது இந்து சமயம். பிறசமயங்களை-அவற்றின் கொள்கைகளை அவதூறு செய்வதோ, எள்ளி நகையாடுவதோ, ஏளனம் செய்வதோ இந்துக்களிடம் காண முடியாதவை. குறிப்பாகத் தமிழ் நாட்டில் இந்தச் சகிப்புத்தன்மை மிக அதிகம்.

" விரிவிலா அறிவினர்கள் வேறொரு சமயம்செய்து
எரிவினாற் சொன்னாரேனும் எம்பிராற்கு ஏற்றதாகும் "

என்று அப்பரும்,

" யாதொரு தெய்வங்கண்டீர் அத்தெய்வம் ஆகி
மாதொரு பாகனார்தாம் வருவர்.

என்று அருணந்திசிவமும்,

" தென்னாடுடைய சிவனே போற்றி
எந்நாட் டவர்க்கும் இறைவா போற்றி "

என்று மணிவாசகரும் மிகுந்தமனவளத்தோடு, பிற சமயங்களை ஏற்றுப்போற்றும் பண்பை இங்கே வளர்த்தனர். திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர் காலத்துச் சமயப் போராட்டங்கள் கூடத் தற்காப்பு முயற்சியே அன்றி, புறரைத்தூற்றத் தொடங்கியவை அல்ல. அக்காலையில்கூட, சமண பௌத்தக்கோட்பாடுகளை நம்மவர்கள் தூற்றியதில்லை. அச்சமயங்களைநடைமுறைப்படுத்தியவர்களின் தவறான நடைமுறைகளே கண்டிக்கப்பட்டன. தோற்றம் கொண்ட இந்தியமண்ணிலேயே சமணம் தேய்ந்து போனதற்கும், பௌத்தம்வெளியேறியதற்கும், இவற்றை நடைமுறைப்படுத்தியவர்களின் தவறுகளே காரணங்கள் என்பது நினைவு கூரத்தக்கன.

உள்ளம் கொள்ள ஒரு புள்ளி விபரம் :

இன்று, இந்திய மக்கள் தொகை ஏறத்தாழ 85 கோடியை எட்டுவதாகப் புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன. இவர்களில் இந்துக்கள் 83 சதவிகிதத்தினர். இஸ்லாமியர்கள் 11 சத விகிதத்தினர். கிறித்தவர்கள் 3 சத விகிதத்தினர். மற்றும் பிற மதங்களைச் சார்ந்து வாழ்வோர் 3 சத விகிதத்தினர். வேறு வகையில் குறித்தால் இன்று இந்தியாவில் வாழும் இந்துக்கள் 70.5 கோடி. பிற சமயத்தார் 14.5 கோடி. இவர்களில் ஏறத்தாழ 12 கோடி மக்கள் கடந்த 500 ஆண்டுகளில் இந்து மக்களின் விழிப்புணர்வுக் குறைவால் - இந்து மதத்திலிருந்து பிற மதங்களுக்குக் கொண்டு செல்லப்பட்டவர்கள். 12 கோடி மக்கள் என்பது இன்றைய அமெரிக்கநாட்டு மக்கள் தொகையில் பாதி அளவுக்கு நிகரானது.

இந்த 12 கோடி மக்கள் இஸ்லாம் மற்றும் கிறித்தவத்திற்குச் சென்றமை மனம் ஒப்பிய மதமாற்றமா ? அம்மதத்தவரின் திட்டமிட்ட மதமாற்ற முயற்சியா என்பதை இந்துப் பெருமக்கள் இனியேனும் சிந்திக்க முன்வரவேண்டும்.

நாம் செய்த தவறுகள் :

வட இந்திய இந்து சாம்ராஜிய, மாமன்னர்களின் அன்றைய ஒற்றுமை இன்மை, முதலில் இஸ்லாமியப் பேரரசும், பின்னர் ஆங்கில (கிறித்தவ)ப் பேரரசும் ஏற்படக்காரணமாயின என்பதை வரலாற்று அறிஞர்கள் குறித்துள்ளனர்.

தென்னாட்டில், குறிப்பாகத் தமிழ்நாட்டில் பிற்காலப் பாண்டியர்கள் தங்கள் தாயாதிச்சண்டையில் இஸ்லாமியர்களைத் துணைக்கழைத்துத் தவறுசெய்தனர். பின்னர் பாளையக்காரர்கள் ஆங்கிலேயர்வரவுக்குத் தங்கள் ஒற்றுமை இன்மையால் வரவேற்பு அளித்தனர். இவர்கள் செய்த தவறுகள் 12 கோடி இந்துக்களை இழக்கவைத்தன. நமது மடியிலுல் இழக்கப்பெற்ற அவர்களே இன்று நமக்கு எதிரிகளாகவும் உள்ளனர். இந்துக்களின் ஒற்றுமை இன்மை அகன்றபாடில்லை. விழிப்புணர்வு உருவாகவில்லை. இந்நிலை நீடித்தால் நமது இழப்பு அளவிடற்கரியதாகிவிடும் என்பதை " ஞானசம்பந்தம் " பொறுப்புணர்வோடு சுட்டிக்காட்டுகிறது.

மதமாற்றம் எதனுல்? காரணங்கள் :

கடந்த 500 ஆண்டுகளில், தொடக்கத்தில் சிறிய அளவிலும், போகப்போகப் பெரிய அளவிலும் ஏற்பட்ட மதமாற்றங்களுக்கு உரிய உண்மையான காரணங்கள் எவை? நடுநிலை நின்று நாம் சிந்திக்கக் கடமைப்பட்டவர்கள்.

1. மதத்தை முன்னிறுத்தி ஆட்சி புரிந்த இஸ்லாமியப் பேரரசர்களின் திட்டமிட்ட முயற்சிகள்; ஆட்சிச் செல்வாக்கு; கெடுபிடிகள்.

மதத்தை முன்னிறுத்தாவிடினும், மதமாற்றங்களுக்கான எல்லா வசதிகளையும் வெளிப்படையாகவும், மறைமுகமாகவும் செய்து கொடுத்த, கிறித்துவத்தைத் தாய்ச்சமயமாகக் கொண்ட ஆங்கில ஆட்சியாளர்களின் செயற்பாடுகள்.

2. இந்துப் பெருமக்களிடம் நிலவிய அறியாமை மற்றும் வறுமை.

3. இந்துமத உட்சமயங்களிடையே நிலவிய பேதங்கள் - பகைஉணர்ச்சி - உட்பூசல்கள்.

4. இந்து மதத்தில் நிலவிய - உயர் ஜாதி - கீழ்ஜாதி என்ற ஜாதி பேதங்களை மிகுதிப்படுத்தியமை.

5. சமய நிறுவனங்கள், சமயத் தலைவர்கள், சமயம் சார்ந்த அமைப்புக்களின் விழிப்புணர்வின்மை.

6. இந்துக்களின் அளவுக்கு அதிகமான சகிப்புத் தன்மை; சிறு நெருப்பு என்ன செய்துவிடும் என்ற அலட்சியப்போக்கு.

7. இந்தியாவில் திட்டமிட்ட மதமாற்றங்களைச் செய்ய வெளிநாடுகளில் செயல்படும் இஸ்லாம், கிறித்தவமத அமைப்புக்கள்; அவை வழங்கும் பெரும் பணம், மற்றும் உதவிகள்.

8. மதச்சார்பின்மை என்ற இந்திய அரசியல் அமைப்பின் வாசகம், பிறழ உரைப்பட்டுச் செயற்படும் அவலம்.

9. மதச்சிறுபான்மையர்களுக்கு இந்நாட்டில் வழங்கப் பெற்றுள்ள வரம்பு மீறிய சலுகைகள். அவற்றை அவர்கள் மத மாற்ற முயற்சிகளுக்குப் பயன்கொள்ள அனுமதித்துள்ள அரசின் போக்கு.

10. விடுதலைக்குப் பின் வந்த மத்திய - மாநில ஆட்சியாளர்களின், கடவுள் நம்பிக்கையற்ற போக்கு!

11. திட்டமிட்ட - இந்து சமயத்திற்கு எதிரான நாத்திக வாதம்-கடவுள் அவமதிப்பு-சமய நம்பிக்கைகளை இகழும் போக்குகளுக்கு வழங்கப்படும் அரசின் அங்கீகாரம்.

12. குடும்பக்கட்டுப்பாடு முதலிய சமூக நலத்திட்டங்களில் அரசு - மதத்துக்கு மதம் வெவ்வேறு கொள்கையைக் கடைப் பிடிக்கும் முரண்பாடு.

வேறு காரணங்களும் உண்டு. தலையாய காரணங்களை மட்டும் இங்கே எடுத்துக் காட்டியுள்ளோம். வாக்குச்சீட்டுக்களைப் பெறுவதற்காகச் சமயச்சிறுபான்மையரை, அளவுக்குமீறியசலுகைகளை வழங்கி ஆசை காட்டும் அரசியல் வாதிகளின் மதவிரோதச் செயல்கள் நாடறிந்த ஒன்று.

இந்துக்களின் விழிப்புணர்ச்சி :

ஒன்றை இங்கே குறிப்பிடுவது அவசியமாகிறது. இந்தியாவில் மதச்சிறுபான்மையர்கள் பெற்றுவரும் சலுகைகள், பெரும்பான்மை மதத்தவர்களுக்கு இல்லை. மதத்தை அரசியலோடு இணைத்து ஆட்சிநடத்தும் அண்டைநாடுகளில், இந்துமதத்தார்க்கு இழைக்கப்படும் அநீதிகளும், அவர்கள் வழிபாட்டுச் சுதந்திரங்களும் அனுமதிக்கப்படாத கொடுமைகளும் இந்தியாவில் வாழும் இந்துக்களில் பெரும்பான்மையர் அறியமாட்டார்கள். உலகில்

அமெரிக்கா, இந்தியா போன்ற ஒன்றிரண்டு நாடுகளைத் தவிர, பிறநாடுகளில் மதச் சிறுபான்மையினர்க்கு எவ்வித உரிமைகளும் வழங்கப்பெறுவதில்லை. இந்தியாவில் சிறுபான்மை மதத்தினர் - தங்களுக்குத் தரப்பெற்றுள்ள சலுகைகளைப் பயன் கொண்டு, இந்துமத அடிமட்ட மக்களைத் திட்டமிட்டு மதமாற்றம் செய்வித்தமையும், அதனால்எழுந்தபிரச்சனைகளையும், போராட்டங்களையும் இந்து மக்கள் மறந்திருக்க மாட்டார்கள் என்றே நம்புகின்றோம். இந்துமதத்திற்கு எதிரான அநீதிகள் தற்போது உணரப்பட்டு வருவது சற்றே ஆறுதல் தருகிறது. அண்மையில் நடந்து முடிந்த பாராளுமன்ற - சட்டமன்ற தேர்தல் முடிவுகள் - இந்துப்பெரு மக்கள் பெற்றிருக்கும் விழிப்புணர்ச்சிக்கு அடையாளம் காட்டுகின்றன.

சமயச்சார்பின்மை தோற்குமானால் ....?

இந்திய அரசியல் அமைப்பின் உன்னதமான வாசகமாகிய 'சமயச்சார்பின்மை' மறுபரிசீலனைக்கு உள்ளாகியிருப்பதற்கு ஆட்சியாளர்களின் மாற்றாந்தாய் மனப்பான்மையும், மதச்சிறுபான்மையினரின் செயற்பாடுகளுமே காரணங்கள் என்பது தெளிவு. நாளை இந்தியாவில் இந்துமத உணர்வுடைய கட்சிகள் ஆட்சிக்கட்டில் ஏறினாலும், இந்தியா 'இந்துநாடு' என அறிவிக்கப்பட்டாலும், மதச்சார்பின்மை நெறி தோற்றாலும் அவை இந்து மக்களின் மதவெறியால் விளைந்தது என்று குற்றம் சாட்ட இயலாது. மதச்சார்பின்மையைத் தவறாகக் கையாண்ட ஆட்சியாளர்களும், மதச்சிறுபான்மைச் சலுகைகளை முறைகேடாகப் பயன்கொண்டு, மதமாற்றங்களைச் செயற்படுத்திய சிறுபான்மைச் சமூகத்தாருமே அதற்கான பொறுப்பை ஏற்க வேண்டியிருக்கும்.

வேலிது; அல்ல அணைகட்டுவீர் !

இந்துக்கள், கொள்கைகளையும், கோட்பாடுகளையும் உணர்ந்து, இந்து மதத்தைக்காட்டிலும் மேலானது இது என்று மனதார நம்பிப் பிறமதத்திற்குச் செல்பவர்களை ஒருக்காலும் தடைசெய்ய விரும்பவில்லை. ஆனால், இந்துக்களின் ஏழ்மையையும், அறியாமையையும் பயன்கொண்டு, அச்சுறுத்தியும், ஆசை காட்டியும் செய்யப்படும் மதமாற்றங்களை இனங்கண்டு தடுத்து நிறுத்த இந்துமக்கள் இனியும் தயக்கம் காட்டமாட்டார்கள். வேலி அமைப்பது புறப்பகை உள்நுழையாமல் காக்க. அணைகட்டுவது உள்ளது வெளியேறாமல் பாதுகாக்க. நாம் அணைகட்டிக்காக்க வேண்டிய நேரம் இது !

சிந்திப்போம் ! செயற்படுவோம் !

இந்துமதம் காப்போம் ! இந்தியாவைக் காப்போம் !

உ

குருபாதம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமை ஆதீனம்

26 ஆவது குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த
பரமாசாரிய சுவாமிகள்

வைத்தீஸ்வரன்கோயிலில் நடைபெற்ற
திருமுறை வேள்வி
இரண்டாம் திருமுறை முற்றோதல் நிகழ்ச்சியின்
நிறைவில் வழங்கியருளிய

ஆசியுரை

6—3—1990

“ கீதத்தை மிகப்பாடும் அடியார்கள் குடியாகப்
பாதத்தைத் தொழநின்ற பரஞ்சோதி பயிலும் இடம்
வேதத்தின் மந்திரத்தால் வெண்மணலே சிவமாகப்
போதத்தால் வழிபட்டான் புள்ளிருக்கு வேளூரே. ”

— இரண்டாந்திருமுறை.

திரு – சொல் விளக்கம் :

இன்று, இப்புள்ளிருக்குவேளூரில் முன்பு திட்டமிட்டவாறு, இறையருளால் இரண்டாம் திருமுறை முற்றோதல் இனிதே நிறைவேறி உள்ளது. ‘ திரு ’ என்னும் சொல் ஆழமான பொருள் உடையது. திருக்கோவையாருக்கு உரை எழுதவந்த பேராசிரியர், “ திரு என்பது கண்டாரால் விரும்பப்படும் தன்மை நோக்கம் ” என்று எழுதினர். காணுதல் என்பது, அறிவால் உள்ளத்து உணர்தலும், கண்ணால் கண்டு அறிதலும் என இருதிறப்படும். இங்கே “ கண்டாரால் விரும்பப்படும் ” என்பதில் காணுதல் என்பது உள்ளத்தால் உணர்தலைக் குறிக்கும், இத்திரு என்பது எல்லாம்வல்ல பரம்பொருளாகிய சிவத்தைக் குறிக்கும்; மேலும், சிவத்தோடு பிரிப்பின்றிநிற்கும் சத்தியாகிய அருளையும் குறிக்கும்; அச்சொல், மேலும் சிவமும் சத்தியும் இணைந்து உயிர்களுக்கு வழங்குகின்ற பேரின்பத்தையும் குறிக்கும். எனவே சிவம், சத்தி, பேரின்பம் என்னும் மூன்றையும் அச்சொல் குறிப்பதாயிற்று.

"திருவே என்செல்வமே" என்று அப்பர் அருளும் இடத்தில் சிவத்தைக் குறிக்கிறது; "சென்றடையாத திருவுடையானை" என்று திருஞானசம்பந்தர் அருளும் இடத்தில் அருளைக் குறிக்கிறது; "சிவமே பெறும் திரு எய்திற்றிலேன்" என்று மாணிக்க வாசகர் அருளிய இடத்தில் பேரின்பத்தைக் குறிக்கிறது. உண்மையுள்ள இடத்தில் அறிவும் - உண்மையும், அறிவும் உள்ள இடத்தில் இன்பமும் என்றும் நிலைத்திருக்கும். இதனையே சத்து, சித்து, ஆனந்தம் என்றும் சச்சிதானந்தம் என்றும் வடமொழியில் குறித்தனர். இப்பொருளில்தான் திரு என்றசொல்லும்திகழ்கிறது.

விரும்பப்பெறும் தன்மை :

பேராசிரியர், கண்டாரால் விரும்பப்படும் தன்மை நோக்கம் என்று எழுதியதற்குப் பொருள், இறைவன் இன்பத்தை வழங்கிய பொழுதும், துன்பத்தை வழங்கிய பொழுதும் உயிர்கள் வெறுப்பின்றி எஞ்ஞான்றும் ஒருபடித்தாக நேசிக்கின்றன என்பதாகும். இறைவன் உயிர்களுக்கு, நன்மையைத் தந்தாலும், விதிவசத்தால் இன்னலைத் தந்தாலும் அவ்வுயிர்கள் வெறுப்புக்கொள்ளாமல் இறைவன் அருளையே நோக்கி நிற்கின்றன. இத்தகைய நிலையில் எல்லா உயிர்களையும் ஈர்த்துவைத்திருக்கும் காந்தசக்தியையே பேராசிரியர் 'திரு' என்று குறிக்கின்றார். இதற்கு உலகியலில் உதாரணம் கூறவேண்டுமானால், தாயும் தந்தையும் பிள்ளைகளைச் சிலநேரங்களில் வெறுத்தும், ஒறுத்தும் இருப்பினும் அப்பிள்ளைகள் தாய் தந்தையையே சுற்றிச் சுற்றி வரும் ஈர்ப்புச் சக்தியைக் கூறலாம்.

முறை – சொல் விளக்கம் :

இத்தகைய 'திருவை' அதாவது பரம்பொருளை அடைந்து அருள் பெறுதற்கு உயிர்களை ஆற்றுப்படுத்துவன திருமுறைகள். 'முறை' என்னும் சொல் முறைப்படுத்துவது நெறிப்படுத்துவது-ஆற்றுப்படுத்துவது என்னும் பொருளை உடையது. மேலும் இம்முறை என்னும் சொல்லிற்கு 'நூல்' என்னும் பொருளும் உண்டு. இதனைக் கச்சியப்ப சிவாசாரியார் தம் கந்தபுராணத்தில் அவையடக்கம் கூறும்பொழுது,

> " இறைநிலம் எழுதுமுன் இளைய பாலகன்
> முறைவரை வேன்என முயல்வது ஒக்குமால் "

என்று கூறுகிறார். ஈண்டு முறை என்னும் சொல் நூல் என்னும் பொருளில் கையாளப்பட்டுள்ளது. முறை என்னும் சொல்லுக்கு 'ஊழ்' என்னும் பொருளும் கூறப்படுகிறது. புறநானூற்றில்

" நீர்வழிப் படூஉம் புணைபோல், ஆருயிர்
முறைவழிப் படூஉம் என்பது திறவோர்
காட்சியில் தெளிந்தனம் "

என்று முறை என்ற சொல் ஊழ் என்னும் பொருளில் ஆளப்பட்டுள்ளது.

இறைவனை அடையும் நெறியினைப்புலப்படுத்தும் நூல்களாகிய திருமுறைகளை நியமமாக ஓதுதற்குரிய ஊழ் உடையார் வினைநீங்கி நலம் பெறுவர் என்பதையும் முறை என்றசொல் உணர்த்துகிறது. உயிர்களின் தொல்வினை (சஞ்சிதம்), நுகர்வினை (பிராரத்தம்), வருவினை (ஆகாமியம்) ஆகியன திருமுறைகளை ஓதுவதனால் துன்புறுத்தா என அத்திருமுறைகள் கூறுகின்றன. இத்தகைய திருமுறைகள் பன்னிரண்டாகத் தொகுக்கப்பெற்றுள்ளன.

முதல் திருமுறை முற்றோதல் சென்ற மாதம் சீர்காழியில் நடைபெற்றது. இரண்டாம் திருமுறை முற்றோதல் இங்கு நடைபெற்றுளது.

பவரோக வைத்தியநாதர் :

இங்கு எழுந்தருளியுள்ள இறைவன் வைத்தியநாதப்பெருமான் என்ற திருப்பெயர் உடையவர். இவர் உடல் பிணியைமட்டுமின்றி உயிர்ப்பிணியாகிய பிறவிப்பிணியையும் நீக்கி அருளுபவர். அப்பர் சுவாமிகள் தமது திருத்தாண்டகத்தில், "தீரா நோய் தீர்த்தருள வல்லான்......" என்று இக்கருத்தைக் குறிக்கிறார். சண்டுத் தீரா நோய் என்பது பிறவியைக் குறிக்கும். இதனால் இப்பெருமானைப் பவரோக வைத்தியநாதர் எனப் போற்றுவர். அருணகிரிநாதர், "பவரோக வைத்தியநாதப் பெருமாளே" என்று முருகனை வைத்தியநாதப்பெருமானாகப் போற்றியுள்ளார்.

'பவம் - பிறப்பு - ரோகம் - நோய் எனவே பிறவி நோயைப் போக்கியருளும் வைத்தியநாதர் சந்நிதியில் இன்று முற்றோதல் காலை தொடங்கி, மாலை வரை சிறப்பாக நடைபெற்றுள்ளது. திருஞானசம்பந்தர் அருளிய இத்தலத்துத் திருப்பதிகம் இவ்விரண்டாம் திருமுறையில் இடம் பெற்றுள்ளது; "கள்ளார்ந்த பூங்கொன்றை........" என்று தொடங்கும் பதிகம் அது. இன்று இத்திருமுறையிலுள்ள அனைத்துத் திருப்பதிகங்களையும் சிந்திக்க இயலாது. ஆதலின் ஒன்றிரண்டு திருப்பதிகங்களைச் சிந்திக்கலாம். முதலாவதாக இத்தலப் பதிகத்தைச் சிந்திக்க முற்படுவோம்.

புள்ளிருக்குவேளூர்ப் பதிகம் :

இத்தலத்திற்குரிய பெயர் புள்ளிருக்கு வேளூர் என்பதாகும். புள்+இருக்கு+வேள்+ஊர் என்று பிரித்து இதற்குப் பொருள் காணலாம். 'புள்' என்பது சம்பாதி, சடாயு என்னும் பறவைகளையும், இருக்கு என்பது வேதத்தையும் 'வேள்' என்பது முருகனையும் ஊர் என்பது ஊர்ந்து செல்லுகின்ற சூரியனையும் குறிக்கும். இவை நான்கும் இங்குப்பூசித்தன ஆதலின் இத்தலம் இப்பெயர்பெற்றது. இக்குறிப்பினுள் முன் இரண்டு செய்திகளைத் திருஞானசம்பந்தர் இத்தலப்பதிகத்தில் குறிக்கின்றார்.

சீதையைக் கவர்ந்து சென்ற இராவணனோடு போரிட்ட சடாயு சம்பாதி என்னும் பறவை அரசர்கள் பூசித்ததலம் இது என்பதனை,

" தள்ளாய சம்பாதி சடாயென்பார் தாம்இருவர்
புள்ளானார்க்கு அரையனிடம் புள்ளிருக்கு வேளூரே. "

" யோசனைபோய்ப் பூக்கொணர்ந்து அங்கு ஒருநாளும்ஒழியாமே
பூசனை செய்தினிதிருந்தான் புள்ளிருக்கு வேளூரே "

என்று குறிக்கிறார். ரிக்வேதம் பூஜித்தது என்னும் கருத்தினை,

" வேதத்தின் மந்திரத்தால் வெண்மணலே சிவமாகப்
போதத்தால் வழிபட்டான் புள்ளிருக்கு வேளூரே "

என்று இயம்புகிறார். சடாயு, சம்பாதி என்னும் பறவைகள் இராவணனோடு போரிட்டன என்னும் வரலாற்றுக் குறிப்பினை, இப்பதிகத்தின் இரண்டாவது பாடலில்,

" மெய் சொல்லா இராவணனை மேலோடி ஈடழித்துப்
பொய் சொல்லாது உயிர்போனான் புள்ளிருக்குவேளூரே "

என்று குறிக்கிறார். இப்பெருமான் பண்ணிசை பாடுவார்க்கு மண்ணுலக வாழ்வோடு விண்ணுலக வாழ்வும் வழங்குபவன் என்பதனை, 8 - ஆவது பாடலில்,

" பண்ணொன்ற இசைபாடும் அடியார்கள் குடியாக
மண்ணின்றி விண்கொடுக்கும் மணிகண்டன் "

என்றும், 11- வது பாடலில்,

" கடியார்ந்த பொழில் காழிக் கவுணியன் சம்பந்தன்சொல்
மடியாது சொல்ல வல்லார்க்கு இல்லையாம் மறுபிறப்பே "

என்றும் கூறுகிறார். இப்பாடல்களில் மண்ணின்றி விண்கொடுக்கும் என்பதும், இக்கோயாம் மறுபிறப்பே என்பதும் இப்பெருமான் பவரோக வைத்தியநாதர் என்பதைக்குறிப்பன என உணரலாம்.

அற்புதத் திருப்பதிகங்கள் :

இத்திருமுறையில் அற்புதத் திருப்பதிகங்கள் ஐந்து உள்ளன. திருமருகலில் கடமை வழுவா வணிகப்பெண்ணின் பொருட்டு, அரவுதீண்டிஇறந்த வணிக இளைஞனை எழுப்பிமணம்முடித்தருளிய "சடையாய் எனுமால்.........." என்று தொடங்கும் பதிகம்; திருமறைக்காட்டில் அப்பரால் திறக்கப்பாடியருளிய திருக்கதவை அடைக்கப்பாடிய "சதுரம் மறை.........." என்று தொடங்கும் பதிகம், மயிலாப்பூரில் எலும்பைப் பெண்ணுக்கும்வண்ணம் பாடியருளிய, "மட்டிட்ட புன்னையங்கானல்........" என்னும் பதிகம். ஆகியன குறிப்பிடத் தக்கன. மட்டிட்டபுன்னை எனத்தொடங்கும் பூம்பாவைத்திருப்பதிகத்தில் ஒருகுறிப்பை இங்குநினைவுபடுத்துவது நல்லது. இதில் "பெருஞ்சாந்தி காணாதே போதியோ பூம்பாவாய்......" என்று வருகிறது. பெருஞ் சாந்தி என்பதற்குப் பலர் குடமுழுக்கு விழா என்று கருதுகின்றனர். இது சரியாகப் படவில்லை. நித்திய வழிபாட்டில் குறைதீரச் செய்வது நைமித்திக வழிபாடு ஆகும். நைமித்திக வழிபாட்டில் குறைதீரச் செய்வது பெருஞ்சாந்தி ஆகும். இதனைப் "பவித்திரோற்சவம்" என்று குறிப்பர். இன்றும்வைத்தீசுவரன்கோயில், திருமயிலாப்பூர்கோயில் போன்ற பெருந்தலங்களில் இது நடைபெறுகிறது.

திருஞானசம்பந்தரின் தாயார் பகவதியார் திருஅவதாரம் செய்ததலம் திருநனிபள்ளி ஆகும். அங்குத் திருஞானசம்பந்தர் எழுந்தருளியபோது பாலையாய் இருந்த அப்பகுதியினை நெய்தல் நிலமாக்கி அருளினார் என்று கூறுவர். இதற்குச் சான்றாக,

"ஒண் கெழுவு
ஞாலத்தினர் அறிய மன்னுநனிபள்ளியது
பாலைதனை நெய்தலாக்கியும்"

என நம்பியாண்டார் நம்பி அருளிய திருவுலாமாலை பகர்கிறது. "காரைகள் கூகை முல்லை..........." என்று தொடங்குவது இத்தலப்பதிகம்.

ஆணை நமது என்ற பெருமான் :

இப்பதிகத்தில் மற்றும் ஒருகுறிப்பும் உள்ளது. இதன் திருக்கடைக்காப்புச் செய்யுளில், 'ஆணைநமதே' என்று ஞானசம்பந்தர் குறித்துள்ளார்.

" நடுஇருள் ஆடும் எந்தை நனிபள்ளி உள்க
வினைகெடுதல் ஆணை நமதே "

என்கிறார். இக்குழப்புமைக்காக மேலும் ஒன்றையும் சிந்திக்கலாம். திருமறைக்காட்டில் தங்கியிருந்த திருஞானசம்பந்தரைமதுரைக்கு அழைத்து, வரச்சொன்ன பொழுது, ஞானசம்பந்தர் மதுரைக்குப் புறப்பட எண்ணுகிறார். உடன் இருந்த அப்பர் சுவாமிகள், நாளும் கோளும் நன்றாக இல்லை; எனவே புறப்படுதல் வேண்டா" என்று தடுக்கிறார். பிள்ளையார் "வேயுறு தோளிபங்கன்... ..." என்று தொடங்கும் கோளறு திருப்பதிகத்தை அங்குமொழிகிறார், இப்பதிகத்தின் திருக்கடைக்காப்பிலும், " ஆணை நமதே " என்று ஞானசம்பந்தர் அருளுகிறார்.

" ஆனசொல் மாலைஓதும் அடியார்கள் வானில்
அரசாள்வர் ஆணை நமதே "

என்று குறிக்கிறார். பிள்ளையார் ஒருவர்தான் " ஆணைநமது " என்று பாடிய பெருமான். ஏன் எனில் இவர் இறைவனுடைய குமாரர் என்ற மகன்மை நெறியில் நின்று உய்ந்தவர் ஆதலின் உரிமையோடு இங்ஙனம் உரைக்கிறார். இவர், 'ஆணை நமது' என்று பாடிய பதிகம் இரண்டு அவ் இரண்டுமே இவ்விரண்டாம் திருமுறையில் இடம் பெற்றுள்ளன என்பது அறிந்து மகிழத்தக்க தாகும். இதனால் கல்வெட்டு - சம்பந்தரை ஆணைநமதென்ற பெருமான் என்று குறிக்கின்றது.

பதிகங்களும் பண்களும் :

இவ்விரண்டாம் திருமுறையில் 122 திருப்பதிகங்கள் உள்ளன. இவை 90 தலங்களில் பாடப்பெற்றவை. இப்பதிகங்களில் இந்தளப்பண் அமைந்த பதிகங்கள் 39, சீகாமரப் பண் அமைந்த பதிகங்கள் 14, காந்தாரப்பண் அமைந்த பதிகங்கள் 29, பியந்தைக் காந்தாரப்பண் அமைந்தபதிகங்கள் 14, நட்டராகப்பண் அமைந்த பதிகங்கள் 16, செவ்வழிப்பண் அமைந்த பதிகங்கள் 10 இப்பண் களின் கட்டளைப் பேதங்களாக 12 காணப்பெறுகின்றன. இந் தளத்தில் நான்கும், சீகாமரத்தில் இரண்டும், காந்தாரமாகிய பியந்தைக் காந்தாரத்தில் மூன்றும், நட்டராகத்தில் இரண்டும், செவ்வழியில் ஒன்றுமாகக் குறிக்கப்பட்டுள்ளன.

வினவுரை :

இப்பதிகங்களில் முதல் நான்கு திருப்பதிகங்கள் வினவுரை அமைப்பில் உள்ளன. வினவுரை என்பது, இறைவனின் திருவுருவத் தில் காணப்பெறும் அடையாளங்களைச் சுட்டி அவற்றின் அவசியம் என்ன என்று வினவுவது. இவ்வினாக்களுக்குத் தக்கவாறு

தத்துவார்த்த விளக்கங்களையும் புராண விளக்கங்களையும் உரை எழுதியோரும், மற்றோரும் புரிந்துகொண்டு விடை கூறிவருகின்றனர்.

ஞானம் பெற வழி :

திருவலஞ்சுழிப் பதிகத்தில் திருக்கடைக் காப்புச் செய்யுளில் அரிய குறிப்பு ஒன்றினைச் சம்பந்தர் அருளுகிறார். வீடுபேறும் அதற்கு ஏதுவாகிய ஞானமும் பெற விரும்புவோர், விரதங்களைக் கடுமையாக மேற்கொண்டு உடலை வாட்டுவதனால் மட்டும் ஆகாது என்றும், திருஞானசம்பந்தர் அருளிய செந்தமிழ்ப் பாடல்களை முறைப்படி ஓத வல்ல ஞானம் உடையார் திருவடியை வழிபட்டாலேயே அப்பெருஞானம் கைகூடும் என்றும் கூறுகின்றார். அடியார்கள்மாட்டுப் பணிவும் பிறரைநேசிக்கும் உணர்வும் உடையவர்களுக்கே ஞானம் கை கூடும் என்பதும் இவை இல்லாதநிலையில் விரதங்களால் உடலை மிகவும் மெலிவித்தல் ஒரு பயனையும் தராது என்பதும் பிள்ளையாரின் கருத்தாகும்.

> " வீடும் ஞானமும் வேண்டுதிரேல் விரதங்களால்
> வாடின் ஞானம் என்னாவதும் எந்தை வலஞ்சுழி
> நாடி ஞானசம்பந்தன் செந்தமிழ் கொண்டிசை
> பாடு ஞானம் வல்லாரடி சேர்வது ஞானமே "

என்பது அப்பாடலாகும்.

உறுப்புக்களின் தகுதி எது :

திரு அனேகதங்காவதம் திருப்பதிகத்தில் மூன்றும் பாடலில் இறைவனின் திருநாமத்தை நவிலாத நாக்கு, 'நா' என்னும் தகுதியைப் பெறாது என்று உறுதியாகக் கூறுகிறார்.

> " நம்பன் நாமம் நவிலாதன நா எனல் ஆகுமே? "

என்று கேட்கிறார். இவ்விடத்து இளங்கோவடிகள் " நாராயணா என்னா நாஎன்ன நாவே " என்று சிலம்பில் கேட்பதை ஒப்பு நோக்கி உணரலாம். இதேநோக்கில் திருஆமாத்தூர்த்திருப்பதிகத்தில் ஞானசம்பந்தர், ஆமாத்தூர் அம்மானைக் காணாத கண்ணெல்லாம் காணாத கண்களே என்றும், அவர் புகழ் கேளாச் செவி எல்லாம் கேளாச் செவிகளே என்றும், அவர் திருநாமம் கூறாத நாவெல்லாம் கூறாத நாக்களே என்றும் கூறுவன ஒப்பு நோக்கத்தக்கன.

திருமடம் கோயிலான குறிப்பு :

திரு அழுந்தூர்த் திருப்பதிகத்தில் ஒருமடமே கோயிலாக ஆகிய குறிப்பு விளங்குகிறது. அழுந்தை என்பது அழுந்தூர் என்பதன் மரூஉ ஆகும். இத்தலம் கம்பர் தோன்றிய சிறப்புடையது. அகத்தியர் கீழே பூமியில் பூசை செய்த போது ஊர்த்துவரதன் என்ற அரசனின் தேர் அதற்கு மேல் சென்றது அதனால் அத்தேர் பூமியில் அழுந்தியது அதனால் தேர் அழுந்தூர் என ஆயிற்று என்று கூறுவர். இப்பதிகத்தின் எல்லாப் பாடல்களிலும், "மாமடம் மன்னிலையே" என்று சம்பந்தர் குறிக்கிறார்.

"தொழுமாறு வல்லார் துயர்தீர நினைந்து
எழுமாறு வல்லார் இசை பாட விம்மி
அழுமாறு வல்லார் அழுந்தை மறையோர்
வழிபாடு செய் மாமடம் மன்னிலையே"

என்பது முதல் பாடல்.

இதனால் இங்கு மடம் இருந்தது என்று தெரிகிறது. அகத்திய முனிவர் பூசித்தார் என்பதனாலும் இக்கருத்து வலுப்பெறுகிறது. வரலாற்று அறிஞர் குடந்தை திரு. சேதுராமன் அவர்கள் இங்குத் திருமடம் ஒன்று இருந்து பின் அதுவே கோயிலாக மாறியது எனக் கூறுகிறார். இது மேலும் சிந்தித்தற்குரியது.

மெய்கண்டாரைத் தந்தபாடல் :

"கண்காட்டும் நுதலானும்" என்ற திருப்பதிகம் இத்திருமுறையில் இடம் பெற்றுள்ளது. அதில் இரண்டாம் பாடல்

"பேயடையா பிரிவெய்தும் பிள்ளையினோ டுள்ளம்நினை
வாயினவே வரம்பெறுவர் ஐயுறவேண்டா ஒன்றும்
வேயனதோள் உமைபங்கன் வெண்காட்டு முக்குளநீர்
தோய்வினையார் அவர்தம்மைத் தோயாவாம் தீவினையே"

என்பது இத்திருப்பாடல்தான் மெய்கண்டார் தோற்றத்திற்குக் காரணமாயிருந்தது. இது இத்திருமுறையில் இருப்பது சிறப்பிற்குரியது. பெண்ணாகடத்தைச் சேர்ந்த அச்சுத களப்பாளர் தமக்கு மகப்பேறின்மையால் தம் ஆசாரியராகிய திருத்துறையூர் அருணந்திசிவாசாரியரிடம் வேண்ட, அவர் திருமுறையில் கயிறு சார்த்திப் பார்த்தபோது இப்பாடல் கிடைத்தது. அதன்படியே திருவெண்காடு அடைந்து முக்குள நீராடி மெய்கண்டாரைத் தவப்பேறாகப்பெற்றார்.

வேளாளர்களும் அந்தணர்களும் :

ஆக்கூர்த் திருப்பதிகத்தில் அங்கு வாழ்ந்த வேளாளர்களும், அந்தணர்களும் வள்ளல்களாக விளங்கினர் என்று குறிக்கிறார். ஒவ்வொரு பாடலிலும் தொல்கோயில் என்று குறிப்பதால் அக்கோயில் மிகப்பழமையானது என்பது புலனாகிறது. இப்பதிகத்தின் மூன்றாவது பாடலில்,

" வேளாளர் என்பவர்கள் வள்ளன்மையால் மிக்கிருக்கும்
தாளாளர் ஆக்கூரில் தான்தோன்றி மாடமே "

என்று குறிக்கிறார். ஒன்பதாவது பாடலில்,

" இன்மையால் சென்றிரந்தார்க்கு இல்லை என்னாது ஈந்துவக்கும்
தன்மையார் ஆக்கூரில் தான்தோன்றி மாடமே "

என்று குறிக்கின்றார், ஈத்துவக்கும் 'தன்மையார்' என்று சுட்டுவது அந்தணரைத்தான் எனச்சேக்கிழார் விளக்கந்தருகிறார். ஏனெனில் இங்கு அந்தணர் மரபில் வந்த சிறப்புலிநாயனார் பெருவள்ளலாக விளங்கினார் என்று பெரியபுராணம் கூறுகிறது. சுந்தரரும் திருத்தொண்டத் தொகையில்,

" சீர்கொண்ட புகழ்வள்ளல் சிறப்புலிக்கும் அடியேன் "

என்று குறிக்கிறார். எனவே சம்பந்தர் அந்தணரையே இங்கு இல்லை என்னாது ஈத்துவக்கும் 'தன்மையார்' என்னும் சொல்லால் கூறுகிறார் என உணரலாம்.

மலையாள அந்தணர் வழிபாடு :

பழு - ஆலமரம். இது இங்குத் தலவிருக்ஷமாக உள்ளது. பழுவூர், மேலப்பழுவூர், கிழப்பழுவூர் என இருபகுதியாயுள்ளது. சோழர் சம்பந்திகளாகிய சேரர்கிளையினரைப்பற்றிய கல்வெட்டுகள் மேலப் பழுவூரில் உள்ளன. கிழப்பழுவூரே பாடல்பெற்றது. மலையாள அந்தணர் இங்கு வந்துவதிந்ததனல் அங்கிருந்தே அந்தணர்களை அழைத்துவந்தனர் என்ற குறிப்புக் காணப்படுகிறது. இதனை, ஞானசம்பந்தர் 'அந்தணர்களானமலையாளரைவரேத்தும் பந்தமலிகின்ற பழுவூரரனை என்று' குறித்துள்ளார்.

அதிசூக்கும பஞ்சாக்கரம் அமைந்த குறிப்பு :

மயானத் தலங்கள் நான்கு என்பர். காசி மயானம், கச்சி யானம், கடவூர் மயானம், நாலூர் மயானம் என்பன அவை.

அந்நான்கனுள் முன்னிரண்டும் வைப்புத்தலங்கள். பின்னிரண்டும் பாடல்பெற்ற தலங்கள், நாலூர் மயானம் திருப்பதிகத்தில் அதிசூக்கும பஞ்சாட்சரமாகிய 'சிவாய' என்னும் சொல் இடம் பெற்றுள்ளது. பத்தாவதுபாடலாகிய அதில்,

“ துன்பாய மாசார் துவராய போர்வையார்
புன்பேச்சுக் கேளாதே புண்ணியனை நண்ணுமின்கள்
நண்பால் சிவாய எனுநாலூர் மயானத்தே
இன்பாய் இருந்தானை ஏத்துவார்க்கு இன்பமே ”

என்று உள்ளது. அப்பர், சுவாமிகள் தம் திருப்பாலைத்துறைத் திருக்குறுந்தொகை ஆறுவது பாடலில்,

“ விண்ணினுர் பணிந்தேத்த வியப்புறும்
மண்ணினுர் மறவாது சிவாய என்று
எண்ணினுர்க் கிடமாஎழில் வானகம்
பண்ணினுரவர் பாலைத் துறையரே ”

என்று இவ் அதிசூக்கும பஞ்சாட்சரத்தைக் குறித்துள்ளார். அதற்குமுன்பே சம்பந்தர் குறித்துள்ளார் என்பது இப்பதிகத்தால் விளங்குகிறது.

இங்ஙனம் திருமுறை முற்றோதல் நிகழ்ச்சியில் பங்கு கொள்வதால் நுட்பமான குறிப்புக்களும், சிவபுண்ணியமும்கிடைக்கின்றன. திருமுறை வேள்வி எனப் போற்றப்பெறும் இந்நிகழ்ச்சியில் மாதந் தோறும் அன்பர்கள் பலரும் கலந்து கொண்டு பயன் பெறுவார்களாக!

வாழ்த்து :

இன்று திருமுறை முற்றோதலில் பங்குகொண்டுள்ள உள்ளூர் வெளியூர் அன்பர்களும், செவிமடுத்து இன்புற்றுள்ள தொண்டர்களும், நானிலமக்களும் எல்லா நலன்களும்பெற்று நீடுஇனிதுவாழ ஸ்ரீ செந்தமிழ்ச் சொக்கன் திருவருளைச் சிந்திக்கின்றோம்.

திருமுறை ஓதிச் செழிப்புறுவோம்.
கருமுறையேகக் கதிபெறுவோம்.

செந்தமிழ்போல் ஓங்கும் சிறந்து!

திரு. அரங்க. முத்துமணி

திருத்தருமை யாதீனத் தேனார்ந்த சோலை
அருளமுதந் தேனை யளிக்கக் - கருநிறங்கொள்
வண்டெனவே சென்று வணங்கிக் குருமணிபால்
கொண்டு களிப்போம் குளிர்ந்து.

வேறு

பூக்கள் மலரும்; பொதிகைமலைத் தென்றலது
நோக்கி நடந்தே நுழைந்தெடுத்துத் - தூக்கிவரும்
இன்ப மணத்தில் இதயம் களிப்பதைப் போல்
மன்னும் வசந்தம் மலரத் – தொன்மைமிகு
சித்திரையாள் இங்கே சிரித்து வருவதுடன்
புத்தாண்டின் மூத்த புதல்வியெனத் - தித்திக்க
ஆண்டுதொறும் வந்தாலும் ஆமாம் புதுவாழ்வைக்
காண்பதற்கு நல்வழியைக் காட்டுகிறாள் - தாண்டவமே
செய்யும் பெருமான் திருவருளால் காலத்தில்
பெய்யும் மழைபோலப் பீடுடனே – வையத்தில்
நன்மைகளைச் செய்ய நயந்துவரும் புத்தாண்டை
இன்ப மணத்தால் இனிதாகத் - தான்கொண்டு
போற்றி வரவேற் போம்; பொன்போல ஏற்றமிகு
ஆற்றல் தமிழும் அருஞ்சைவம் - தோற்றத்தில்
ஒன்றெனவே தோன்ற உலகம் பயன்கொள்ள,
"என்கடன் நற்பணிகள்" என்றுரைத்த - மன்னுபுகழ்
அப்பர் அடிச்சுவட்டில் ஆன்றபிர மோதூத
ஒப்பற்ற பாதையினை உள்ளந்தான் - எப்பொழுதும்
ஏற்று வழிநடக்க இனிதே மலர்கிறது
நாற்றிசையும் காண நலஞ்செய்யும் - சாற்றுங்கால்
"அந்தாதி" போலவே ஆண்டுவர, நம்வாழ்வு
செந்தமிழ்போல் ஓங்கும் சிறந்து !

இன்றைய வாழ்விற்குக் — — கம்பராமாயணம்

டாக்டர் திரு. ச. முத்துக்குமரன்
துணைவேந்தர், பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சிராப்பள்ளி.

கம்பரால் இயற்றப்பட்ட இராமாயணம் அளவாற் பெரியது. பல்லாயிரம் பாக்களைக் கொண்டது. நூற்றுக் கணக்கான கதை மாந்தர்களைக் கொண்டது. எண்ணிறந்த நிகழ்ச்சிகளையும் கிளைக் கதைகளையும் உள்ளடக்கியது. இது ஒரு மாபெரும் காப்பியம். நினைவில் நிற்கவல்ல காப்பிய மாந்தர்களும் கிளைக் கதைகளும் இக்காப்பியத்தை என்றென்றும் நிலைபேறு உடையதாகச் செய்துள்ளது. ஆனால் இந்த ஆய்வுக் கட்டுரை இவற்றையோ அல்லது கம்பராமாயணத்தை இலக்கியம் என்ற நோக்கில் திறனாய்வு செய்வதையோ நோக்கமாகக் கொள்ளவில்லை. கம்பரின் மாபெரும் படைப்பாகிய கம்பராமாயணம் தற்காலத்தோடு கொண்டுள்ள பொருத்தப் பாட்டினைச் சுருக்கமாகக் காண்பதே இவ்வாய்வின் நோக்கம் ஆகும்.

இராமாயணத்தின் கதை இதுவே: அயோத்தி நாட்டு மன்னன் தசரதனின் மூத்த மகனாகிய இராமனே இக்காப்பியத்தின் தலைவன். இராமனுக்குப் பரதன், இலக்குவன், சத்துருக்கன் என்ற பெயருடைய மூன்று தம்பியர். இராமன் இளமையிலேயே விசுவாமித்திரர் என்னும் முனிவரால் அவரது யாகத்தினை அரக்கர்களிடமிருந்து பாதுகாக்க இலக்குவனுடன் சேர்த்து அழைத்துச் செல்லப்படுகிறான். இராமன் தனக்குக் கொடுக்கப்பட்ட பணியினைச் சிறப்பாக வெற்றியுடன் முடித்து முனிவரின் நல்வாழ்த்துக்களைப் பெறுகிறான். அதன் பின் இராமன் விசுவாமித்திரருடன் சேர்ந்து சனக மன்னனின் தலைநகரத்திற்குச் செல்கிறான். அங்கு இராமன் சனகன் விதித்திருந்த ஒரு நிபந்தனையை ஏற்று, அதில் வெற்றி கண்டு அவரது மகளாகிய சீதையை மணக்கிறான். பின்னர் மன்னன் தசரதன் இராமனுக்கு முடிசூட்ட விரும்பியபொழுது கைகேயி, மன்னன் தசரதன் தனக்கு ஏற்கனவே தருவதாக வாக்களித்திருந்த இரண்டு வரங்களைத் தனக்கு அளிக்குமாறு கட்டாயப் படுத்துகிறாள். அவள் கேட்கும் வரங்களாவன: ஒன்று தன் மகன் பரதன் மன்னனாக முடிசூட்டப்பட வேண்டும், இரண்டு, இராமன் பதினான்கு ஆண்டுகள்

காட்டில் வசிக்க வேண்டும் என்பன. மன்னன் தசரதன் இவ்வரங்களைக் கேட்டு அதிர்ச்சியடைகிறான். தான் ஏற்கனவே வரம் தருவதாக வாக்குறுதி அளித்திருந்ததால் வரங்களைத் தர வேண்டிய கட்டாயத்திற்கு அவன் ஆளாகிறான். இராமன் நாடு துறந்து காடேக மகிழ்ச்சியுடன் ஒப்புக்கொள்கிறான். சீதையும் இலக்குவனும் இராமனுடன் செல்கின்றனர். வனவாசத்தின் போது இராமனும் இலக்குவனும் அரக்கர்களுடன் போரிட நேர்கிறது. இலங்கை மன்னன் இராவணன் இரக்கமெனும் பொருளில்லா அரக்கன். சிறந்த போராற்றல் படைத்த வீரன்; அவன் தங்கை இராம இலக்குவர்களிடம் முன்பொருமுறை முறை தவறி நடந்ததால் அவர்களால் அவளுக்கு வழங்கப்பட்ட தண்டனையையும், ஏற்பட்ட அவமானத்தையும் காரணமாகக்கொண்டு அவர்களைப் பழிவாங்கும் நோக்கத்துடன் சீதையைக் கவர்ந்து செல்கிறான். அதன் பின் இராமன் வானர வீரர்களின் உதவியுடன் போர் மேற்கொண்டு இலங்கையை முற்றுகையிட்டு இராவணனைக் கொல்கிறான். பிறகு இராமன் சீதையுடனும், இலக்குவனுடனும் நண்பர்களுடனும் அயோத்திக்குத் திரும்புகிறான். அங்கு இராமன் மன்னனாக முடி சூட்டப் படுகிறான். அதன் பின் இராமன் அயோத்தி மாநகரைப் பல காலம் நன் முறையில் ஆண்டு வருகிறான்.

இந்தப் பழங்கதை, ஒரு மன்னன் பற்றிய கதை, எப்படித் தற்காலவாழ்வோடு பொருத்தப்பாடுடையது என்னும் வினா நம்முன் எழலாம்; பழங்காலமன்னர்கள் இளவரசர்களின் கதைகள் இன்றைய குடியரசு யுகத்திற்கு எந்த அளவு விழுமம் உடையதாகவும் அல்லது ஆர்வமூட்டக் கூடியதாகவும் இருக்க முடியும்? ஒரு இளவரசனது வாழ்வு, அவனது நோக்கங்கள், செயல்கள் முதலியன தற்கால மக்களின் வாழ்வு, நோக்கங்கள், செயல்கள் முதலியவற்றோடு எந்த விதத்திலும் தொடர்புடையனவாக இல்லை; எனவே ஒருவர் இராமாயணத்தை மேலோட்டமாகப் படித்து விட்டு நம்முடைய இன்றைய வாழ்க்கைக்கும் தற்காலத்திற்கும் அது எவ்வாற்றானும் பொருந்தாது என்றும் அதனால் இராமாயணத்தை நாம் போற்ற வேண்டியதில்லை என்றும் கருதிப்புறக்கணிக்கும் முடிவுக்கு வரலாம். ஆனால் இக்காப்பியத்தில் உள்ள 12,000 பாடல்களையும் ஆழ்ந்து சற்று நீள நினைந்தால் அக்கதை எந்த அளவு நவீன வாழ்வுடன் தொடர்புடையது என்பது தெரியவரும்; இக் காப்பியத்தின் பின்னுள்ள அதன் சிறப்பான நோக்கங்களும் நமக்குப் புலனாகும். இன்றைய வாழ்வோடு கம்பராமாயணம் எந்த அளவுக்கு இயைபுடையது என்று காண்பதும் கம்பராமாயணத்தில் எழுப்பப் படும் சில வினாக்கள், சில சிக்கல்கள், சில சூழமைவுகள் எவ்வாறு இக்கால வாழ்வோடு இணைந்து பொருள் தருகின்றன என்று காண்பதுமே இக்கட்டுரையின் நோக்கம்.

மதுவிலக்கு :

கம்பராமாயணத்தில் பல பகுதிகளில் குடிப் பழக்கம் கண்டிக்கப் பட்டுள்ளதை நோக்கும்போது நமக்கு வியப்பாக இருக்கிறது. மதுவிலக்குக் கொள்கை இக்காப்பியத்தில் பலஇடங்களில் ஆழமாக வலியுறுத்தப் படுகிறது. எந்த ஒரு அரசு மதுவிலக்கைச் செயற் படுத்த விரும்புகிறதோ அது இக்கருத்துகளைப் பயன்படுத்தமுடியும். கம்பன் சுக்ரீவன் வாயிலாகக் குடிப் பழக்கம் கூடாது என்பதை உணர்த்துகிருன்.

இராமன் இராவணனுக்கு எதிராகத் தொடுத்திருக்கும்போரில் இராமனுக்குத் தான் உதவுவதாகவும் மழைக் காலம் முடிந்த பின் தான் தன் படை அனைத்தையும் திரட்டிக்கொண்டு உதவிக்கு வருவதாகவும் சுக்ரீவன் உறுதி தருகின்ருன். ஆனால் மழைக்காலம் முடிந்த பின்பும சுக்ரீவன் திருப்பி வரவில்லை. இராமன் தன் தம்பி இலக்குவனை இதற்கானகாரணங்களை அறிந்துவருமாறுகிட்கிந்தை நகருக்கு அனுப்புகிருன். இலக்குவன் கிட்கிந்தை நகருக்குள் நுழைந்தவுடனயே அங்கதன் சுக்ரீவனுக்கு இராமஇலக்குவர்களது கோபத்தை அறிவிக்க முயல்கிருன். மேலும் இலக்குவனது வரவை யும் சுக்ரீவனுக்கு அறிவிக்கிருன்.

இக்கதைப் பகுதியில் தொடர்ந்து இடம் பெறும் சிலபாடல்கள் கள்ளுண்பதின் தீமைகளை மிக விளக்கமாகக் கூறுகின்றன. இப் பகுதியில் இடம்பெறும் கடைசிச் செய்யுள் சுக்ரீவன் இனி நான் கள்ளுண்பதில்லை என உறுதி பூணும் சூளுரையாக அமைந்துள்ளது.

"உறவுண்ட சிந்தையானும் உரை செய்வான்; ஒருவற்கு இன்னம்
பெறல் உண்டோ; அவரால் ஈண்டு யான் பெற்ற பேர் உதவி
[உற்றது
இறல் உண்டோ? என்னின் தீர்வான் இருந்த பேர் இடரை
[எல்லாம்
நறவு உண்டு மறந்தேன்; காண நாணுவல் மைந்த; என்ருன்"

— கிட்கிந்தா காண்டம், கிட்கிந்தைப் படலம், பாடல்-89.

சுக்ரீவன், 'இராமனது பெறுதற்கரிய உதவியினால் இராமனிட மிருந்து பெற்ற நன்மைகளையும் அதனுல் நான் இப்போது பெற்றுக் கொண்டிருக்கும் சுகங்களையும் இனி எக்காலத்திலும் வேறு எவரிட மிருந்தும் நான் பெற முடியாது என்பதையும் கள்ளுண்டதால் மறந்தேன். சீதையைப் பிரிந்த இராமனது பிரிவுத் துயரத்தையும் நான் மறந்து போய் விட்டேன்' என்று கூறுகிருன்.

" ஏயின இது அலசல், மற்று, ஏழைமைப் பாலது என்கொ?
தாய் இவள், மனைவி என்னும் தெளிவு இன்றேல், தருமம் என் ஆம்?
தீவினை ஐந்தின் ஒன்று ஆம்; அன்றியும், திருக்கு நீங்கா
மாயையின் மயங்குகின்றேம்; மயக்கின்மேல் மயக்குப வைத்தாய்"
— கிட்கிந்தா காண்டம், கிட்கிந்தைப் படலம், பாடல்-90

என்னிடம் இக் குடிப்பழக்கத்தைத் தவிர வேறு எந்த அறிவீன மான செயலும் இல்லை. தன் தாயையும் மனைவியையும் பிரித்தறிய முடியவில்லையெனில் ஒரு மனிதன் எவ்வளவு ஒழுக்கமுடையவனாய் இருந்தும் என்ன பயன்? குடிப் பழக்கம் ஐந்து வகைப்பட்ட அஞ்சத் தக்க பாவங்களுள் ஒன்று. ஒரு மனிதனை செய்யக் கூடிய இழிசெயல் தன் நிலை மறக்கச் செய்யும் கள்ளை உண்பதேயாகும்.

" தெளிந்து தீவினையைச் செற்றார் பிறவியின் தீர்வர்" என்ன,
விளிந்திலா உணர்வினேரும், வேதமும், விளம்பவேயும்,
நெளிந்து உறை புழுவை நீக்கி, நறவு உண்டு நிறைகின்றேனும்
அளிந்து அகத்து எரியும் தீயை நெய்யினுல் அவிக்கின்றாரின் "
— கிட்கிந்தா காண்டம், கிட்கிந்தைப் படலம், பாடல்-91

தீவினையினின்றும் நீங்கியோர் உயர்ந்த சொர்க்க உலகத்தை அடைவர் என முற்றக் கற்ற சான்றோரும் வேதங்களும் கூறுவதை நான் அறிவேன். எனினும் நெளியும் புழுக்களை நீக்கிவிட்டு இழிந்த மதுவை விரும்பிப் பருகுகிறேன். இது நெய்யை வார்த்துத் தீயை அவிப்பது போன்றதன்றோ?

" தன்னைத் தான் உணரத் தீரும், தகை அறு பிறவி என்பது
என்னத் தான் மறையும் மற்றத் துறைகளும் இசைத்த எல்லாம்
முன்னைத் தான் தன்னை ஓரா முழுப் பிணி அழுக்கின்மேலே,
பின்னைத் தான் பெறுவது, அம்மா! நறவு உண்டு திகைக்கும்
[பித்தோ?"
— கிட்கிந்தா காண்டம், கிட்கிந்தைப் படலம், பாடல்-92

தன்னை முழுவதும் உணர்வதாலேயே ஒரு மனிதன் தன் பிறவி நீங்கி முத்தியடைய முடியும். இவ்வுண்மையை உணராமல் மேலும் மேலும் கள்ளுண்ணலின் மூலம் முன்னரே நோயுற்ற என் ஆன்மாவுக்கு மேலும் அதிக இன்னல்களை விளைவிக்கின்றேன்.

" வஞ்சமும், களவும், பொய்யும், மயக்கமும், மரபு இல் கொட்பும்,
தஞ்சம் என்றாரை நீக்கும் தன்மையும், களிப்பும், தாக்கும்;
கஞ்ச மெல் அணங்கும் தீரும், கள்ளினல்; அருந்தினாரை
நஞ்சமும் கொல்வது அல்லால், நரகினை நல்காது அன்றே?
— கிட்கிந்தா காண்டம், கிட்கிந்தைப் படலம், பாடல்-95

குடிப் பழக்கம் என்பது வஞ்சம், களவு, பொய், மயக்கம், ஒழுக்கமின்மை, தஞ்சம் என்று வந்தவருக்குத் தஞ்சம் அளிக்காமை போன்ற பல தீய பழக்கங்களுக்கு வழி வகுக்கும், மலரின் மேவு திருவாகிய இலக்குமியும் அவரை விட்டு நீங்குவாள். நஞ்சு மனிதனைக் கொல்ல மட்டுமே செய்யும். ஆனால் குடிப் பழக்கமோ உண்பவரைக் கொல்லுவது மட்டுமன்று; மனிதனின் ஒழுக்கத்தை யும் முழுதும்சிதைத்து அவனை நரகத்திற்குக் கொண்டுசெலுத்தும்

"கேட்டனென், நறவால் கேடு வரும் என கிடைத்த; அச் சொல்
காட்டியது; அனுமன் நீதிக் கல்வியால் கடந்தது அல்லால்,
மீட்டுஇனி உரைப்பது என்னே? விரைவின், வந்து அடைந்தவீரன்
மூட்டிய வெகுளியால் யாம் முடிவதற்கு ஐயம் உண்டோ?"

— கிட்கிந்தா காண்டம், கிட்கிந்தைப் படலம், பாடல்-96,

குடிப் பழக்கம் பல கெட்ட பழக்கங்களுக்கு வழி காட்டும்என்று கற்றறிந்த சான்றோர் மூலம் நான் கேட்டிருக்கிறேன். இப்போது அவ்வுண்மையை அனுபவ வாயிலாகவும் உணர்ந்து விட்டேன். இலக்குவனின் சினம் எனக்குக் கள்ளுண்பதன் தீமையை நன்கு உணர்த்திவிட்டது. நான் என்றும் இப்புதிய அனுபவத்தை மறவேன்.

"ஐய; நான் அஞ்சினேன், இந் நறவினின் அரிய கேடு;
கையினால் அன்றியேயும் கருதுதல் கருமம் அன்றால்;
வெய்யது ஆம் மதுவை இன்னம் விரும்பினேன் என்னின், வீரன்
செய்ய தாமரைகள் அன்ன சேவடி சிதைக்க என்றான்"

— கிட்கிந்தா காண்டம், கிட்கிந்தைப் படலம், பாடல்-97

இப்பொழுது நான் கள்ளுண்பதால் வரும் கெட்ட விளைவுகள் குறித்து அஞ்சுகிறேன். இனி நான் கள்ளுண்ண மாட்டேன். இனி என் சிந்தையிலும் கள்ளுண்ணல் குறித்துச் சிந்திக்க மாட்டேன். என் எதிர்காலத்தில் நான் மதுவுண்ண என்றுவது விரும்புவேனாயின் அது நான் வீரன் இராமனுக்குச் செய்யும் மாபெரும் அநீதி ஆகும்.

மதுவருந்துவதால் விளையும் தீமைகள், கள்ளுண்பது குறித்த தன் அனுபவம் ஆகியவற்றை விளக்கிய பின்னர், சுக்ரீவன் இனி தான் ஒரு போதும் கள்ளுண்ணேன் என்று சூளுரை பகர்கிறான். கள்ளுண்பதன் தீமைகளைச் சுக்ரீவன் அடுக்கிக் கூறும் அனைத்தும் மதுவுக்கு அடிமைப்பட்டுக் கிடக்கும் மனிதர்களின் மனதில் நிச்சயம் விரும்பத்தக்க ஒரு மாற்றத்தை விளைவிக்கக் கூடியன எனலாம்.

(தொடரும்)

காவியத்தில் திருப்புமுனைகள்

டாக்டர். திரு. இரா. செல்வக்கணபதி,
எம். ஏ., பி. எட்., பிஎச். டி.,
தருமபுரம்.

(மலர் 49, இதழ் 3, பக்கம் 126 இன் தொடர்ச்சி.)

இருவகைத் திருப்பு முனைகள் :

மாதவியோடு மனம் நிறைந்த வாழ்வினைப் பெற்ற கோவலன் பூம்புகார்க் கடற்கரையில் கானல்வரி பாடிப் பிரிவது சிலப்பதிகாரத்தின் அடுத்துவரும் பெரும் திருப்பு முனையாக அமைகிறது.

காவியப்போக்கில் அமையும் திருப்பு முனைகளை இருவகையாகப் பிரிக்கலாம்.

அயோத்தியில் தொடங்கி - இராவணவதத்தில் நிறையும் இராமன் வாழ்வின் திருப்புமுனைகள் அவதார நோக்கத்தை எய்துவதற்கென்றே அமைகின்றன. இவை ஒரு நேர்ப்பயணத்தின் சாலைத் திருப்பங்கள்போல் அமைகின்றன.

இன்னொருவகைத் திருப்பங்கள் பலவும், மீண்டும், மீண்டும் ஒரு காவியக் கருவையோ, பாத்திரத்தையோ சுற்றிச் சுற்றி வருமாறு அமைவது. திருக்கோயில் தேரோட்டத்தில் நிகழும் ஒவ்வொரு திருப்பமும் கருவறையைச் சுற்றியே சுழல்வதுபோல் வது இது.

சிலப்பதிகாரத் திருப்பு முனைகள் இரண்டாம் வகையைச் சார்ந்தது. இங்கே ஒவ்வொரு திருப்பமும் கண்ணகியைச் சுற்றிச் சுற்றியே அமைகின்றது.

சிலம்பில் இரண்டாவது திருப்பம் :

கடலாடு காதையிலேயே இரண்டாவது திருப்பத்திற்குக் கட்டியம் பெறுகிறார் இளங்கோவடிகள்.

" ஆடலும் கோலமும் அணியும் கடைக்கொள
ஊடற் கோலமோ டிருந்தோன் "

உவக்குமாறு மாதவி, பெரிதும் அவனை மகிழ்விக்கப் பலவாறும் முயல்கிறாள். கழிக்கானல்கரையில் கோவலன் ஊடல் நீங்கி,

"மாதவிதன் மனம்மகிழ வாசித்தல் தொடங்கும்" என்பதனால், அவன் அவளை மகிழ்விக்கவே கருதினான் என்பதையும் கவிஞர் சுட்டுகின்றார். பாடல் கேட்ட மாதவி மகிழாதவளாய் மன்னும் ஓர்குறிப்புண்டு; இவன் தன்னிலைமயங்கினான் எனக் கருதுகின்றாள். கலவியால் மகிழ்ந்தாள் போல் புலவியால் யாழ்வாங்குகின்றாள்; தானும் ஓர் குறிப்பினள்போல் கானல்வரிப்பாடல் பாடத்தொடங்குகின்றாள். இவள் பாடப்போகும் பாடல்கள் கோவலனைச் சினமூட்டப் போகின்றன. அவன் பிரியப் போகிறான். காப்பியத்தின் இரண்டாவது பெருந்திருப்பம் நிகழப் போகின்றது. இளங்கோவடிகள் பின் நிகழப் போகும் திருப்பத்திற்கு, அவள் பாடல் தொடங்கும் முன்னரே ஒரு கட்டியம் கூறுகின்றார்.

"நிலத்தெய்வம் வியப்பெய்த நீள்நிலத்தோர் மனம்மகிழ
கலத்தொடு புணர்ந்தமைந்த கண்டத்தால் பாடல்-தொடங்கும்"

எனப் பேசுகின்றார். இவள் பாடட்டும்! பாடினால் கோவலன் சினப்பான்! சினந்தால் பிரிவு தலைப்படும். அதுவே காவியத்திருப்புமுனையாக அமையும். ஆனால், மாதவி அவ்வாறு பாடத் தொடங்கு முன்னரே இரு குறிப்பினை ஆசிரியர் இணைக்கிறார். ஒன்று 'நிலத்தெய்வத்தின் வியப்பு'. இரண்டாவது 'நீள்நிலத்தோரின் மன மகிழ்ச்சி'. இவற்றை இளங்கோவடிகள் இங்கே ஏன் சுட்டுகின்றார்?

நிலத்தெய்வம் வியந்தது :

ஏறத்தாழ பதின்மூன்றாண்டுக்காலம் மாதவி கோவலனின் உரிமை மனைவியாகவே வாழ்ந்தாள்! அவள் வயிற்றில் பிறந்த மகளுக்குத் தன் குலதெய்வத்தின் பெயரையே 'மணிமேகலை' எனச் சூட்டும்அளவிற்கு மாதவியின் பண்பாடு சிறந்திருந்தது. மாதவியின் உயர்பேர் ஒழுக்கத்தை அருகிருந்து கண்டு மகிழ்ந்தவன் நெய்தல் நிலத்தெய்வமாகிய வருணன். அவன் வியந்தானும். ஏன்?

கோவலனை மகிழ்விப்பதையே வாழ்வாகக் கொண்டு வாழ்ந்த மாதவி! ஐயகோ! உட்குறிப்புப்படப்பாடி வாழ்விழக்கப்போகிறாளே என்ற வருத்தத்தில். இவள்பால், இம்மாற்றம் எவ்வாறு அமைந்தது என்ற ஏக்கம் வருணன் பால் வியப்பாக விரிகிறது!

நீள்நிலத்தோர் மனமகிழ்ச்சி :

நீள்நிலத்தோர் மனம் மகிழ்ந்தார்கள்! வியக்கத்தக்க - இளங்கோவடிகளின் - சமூகப் பார்வையின் மலர்ச்சியில் பூத்த தொடர் இது!

உலகவர்களுக்கு, மாதவி எத்தகையவள் என்பதில் கவலை இல்லை! கட்டியமனைவியிடமிருந்து கோவலனைப் பிரித்தவள் இந்த மாதவி! இதோ! உட்குறிப்புப்படக் கானல்வரி பாடப்போகிறாள்!

கோவலன் சினந்து மாதவியை வெறுத்துப் பிரியப் போகிறான்! அப்பிரிவு கண்ணகி கண்ணீருக்கு மருந்தாகப் போகிறது! கணவன் பிரிந்த மனைவியோடு சேர்வதையே விழைந்து போற்றும் சமூகத்திற்கு மாதவிபாடும் கானல்வரியின் பின் விளைவு குறித்த மகிழ்ச்சி மேலோங்கிநிற்கிறது.

இளங்கோவடிகள் அற்புதம் படைத்த நுட்பமான இடம் இது!

தமிழர் கண்ட ஊழ்க் கோட்பாடு :

உலகவர் போல மாதவியை வெறுத்தொதுக்கிக் குற்றவாளி எனக்கூற இளங்கோவடிகளின் நெஞ்சம் ஒப்பவில்லை.

காரண - காரியங்களுக்கு அப்பாற்பட்ட நிகழ்வுகள் நடக்கும் போது, அதற்குத் தமிழர்கள் கண்ட சமாதானமே ஊழ்!

பாதவியின் தன்மைக்கு மாறான - அவள் பண்புகளொடுமுரணி இக்கானல்வரிப்பாடல்களுக்கு அவளைக்குற்றவாளியெனப் பொறுப் பாக்க ஆசிரியருக்கு நெஞ்சம் இல்லை!

"யாழிசைமேல் வைத்துத்தன் ஊழ்வினைவந்து உருத்தாகலின்"

என ஊழைக் காரணம் காட்டிக் காவியத் திருப்பத்தை இளங்கோ வடிகள் நடத்திச் செல்கிறார்.

கோவலன் கொலையில் காவியம் ஒரு முறை குலுங்கித் திரும்பு கின்றது!

கண்ணகி காற்சிலம்பிலிருந்து மாணிக்கக் கற்கள் புறப்பட்டு மன்னவன் வாய்முதல் தெரித்த போது உச்சகட்ட காப்பியத் திருப்பம் அமைந்து கதை நிறைகிறது.

இளங்கோவிற்கு ஓர் இடர்ப்பாடு :

நிறைவான, வழக்குரை காதைத் திருப்புமுனை கண்ணகி உடைத்த அவள் காற்சிலம்பிலிருந்து மன்னவன் சற்றும் எதிர் பாராத மாணிக்கக்கற்கள் தெரித்தெழுவதே ஆகும், என்றாலும், இத்திருப்பத்தை அமைப்பதிலே ஒரு இடர்ப்பாடும் அமைகிறது.

"நீர்வார் கண்ணை எம்முன் வந்தோய்
யாரையோ நீ மடக்கொடியோய்!"

இது பாண்டியன் நெடுஞ்செழியன் தொடுத்த வினா!

"தேரா மன்னு செப்புவது உடையேன்...... "

என்றுதொடங்கி, சோணாட்டுச்சிறப்பு, மாமனின்பெருமை, கணவன் பெயர், அவன் கொலையுண்டமை யாவும் கூறி,

"கோவலன் மனைவி கண்ணகி என்பது என்பெயரே...... "

எனக் கண்ணகி விடைதருகிறாள்! 'யார்' என்ற மன்னனின்வினவிற்குக் 'கண்ணகி' என விடை அமைவது நேராகவே அமைகிறது.

இரண்டாவதாகப் பாண்டியன், கோவலன் கள்வன் என அறிந்தவகையில்,

" கள்வனைக் கோறல் கடுங்கோ லன்று
வெள்வேற் கொற்றம் காண் "

எனத்தன்னிலை விளக்கம் அளித்து, 'நின்கணவன் கள்வனல்லனே' என்ற குறிப்பைப் பெய்கிறான்!

இங்கேதான் காப்பியத்தின் பெருந்திருப்பத்தை அமைக்க வேண்டிய கட்டாயம் இளங்கோவடிகளுக்கு அமைகிறது!

பாண்டியன் கள்வனைக் கொன்றது செங்கோன்மையே என்றதும், கண்ணகிக்கு அடுத்துப் பேசச் செய்தித் தொடர்ச்சி இல்லாது போகிறது. 'என் கணவன் கள்வன் அல்லன்' என்று வேண்டுமானால் அவள் கூறியிருக்கலாம்! ஆனால், அவளோ வினவப் படாத வினா ஒன்றற்கு விடை பகர்ந்து புதுமை செய்கிறாள்.

உன் காற்சிலம்பின் உள்ளிட்டுப்பரல் முத்தா? மணியா எனப் பாண்டியன் வினவவில்லை!

கண்ணகியோ,

" நற்றிறம் படராக் கொற்கை வேந்தே
என்காற் சிலம்பு மணியுடை அரியே "

என்று புதுத்தடம் பேசுகின்றாள். மன்னன் இசைகிறான். சிலம்பு முன்வைக்கப்படுகிறது. உடைக்கிறாள். மணிதெறிக்கிறது. மன்னன் மாள்கிறான். கறை நீள்கிறது!

இந்தத் திருப்பத்தை வினவப்படாத நேரத்தில் விடையாக்கிப் புதுமை செய்கிறார் இளங்கோவடிகள்.

கண்ணகியின் அடக்கமும், கற்பும் பேசிய இளங்கோவடிகள், அளவற்ற துயரத்திலும் அறிவுத்திறம் மாறாத அவள் பேரியல்பை நிறைவாக நிலைநாட்ட இவ்வுத்தியைக் கையாள்கிறார். அறிவார்ந்த வணிகர் குலப்பெண்ணிற்கு அணிகலன் அழகும் உள்ளீடும் நன்கு தெரிந்தவை. 'கள்வனைக் கோறல் கடுங்கோல் அன்று' என்றதும் தன் கணவன் கள்வன் அல்லன் என்பதை நிறுவிக்காட்ட, பாண்டிநாட்டு முத்துச்சிறப்பை அறிந்திருந்த கண்ணகி, சிலம்பின் உள்ளீட்டுப் பரலாலேயே இதனை நிறுவ இயலும் என ஒரு நொடிப் பொழுதில் முடிவுக்குவருகிறாள். அதுபற்றியே, "நற்றிறம் படராக் கொற்கை வேந்தே" என முத்துக்குப் பெயர்போன கொற்கை நகரின் பெயரால் மதுரைப் பாண்டியனை அழைக்கிறாள். கதை தொடர்கிறது. திருப்பம் காப்பிய நிறைவிற்குப் பேரழகாகிச் சிறக்கிறது.

திருப்பங்கள் – கவிஞன் நிலை :

காப்பியங்களில், திருப்பு முனைகள் அமைப்பதில், கவிஞனுக்கு உள்ள மாபெரும் பொறுப்புக்களைச் சிலப்பதிகாரம் நிறைவாகவே எடுத்துக்காட்டுகின்றது. குடும்ப வாழ்வில் நிகழ்ந்த திருப்பங்களைச் சிலப்பதிகாரம் பேசினால், அரசியல் வாழ்வில் நிகழ்ந்த திருப்பங்களை இராமகாதை அழகுற விதிக்கின்றது. தாமே படைக்கும் காவியங்களில் திருப்பு முனைகள் அமைப்பது கவிஞனுக்குச் சற்று எளியது. முன்னரே வழங்கிவரும் கதையைத் தாய் மொழியில் புனைவார்க்குத் திருப்புமுனைகளை அமைத்துக் கதை நடத்துவதில் இடர்ப்பாடுகள் ஏராளம்! இராமாயணமும், மகாபாரதமும் இந்திய நாடு தழுவிய, நன்கு அறிமுகமான பேரிதிகாசங்கள். இவற்றின் கதைப்போக்கு முன்னரே அறியப்பட்டது! அமைந்துகிடப்பது! சிறு மாற்றங்களைத்தவிர மூலக்கதைப் போக்கில் பெரிய மாற்றங்களைக் கவிஞன் செய்ய வாய்ப்பில்லை. காவியத்தின் திருப்பு முனைகளில் பெரியனவும் உண்டு; சிறியனவும் உண்டு!

கற்சிற்பத்தில் மயிர்க்காம்புகள் :

இராமகாதைத் திருப்பு முனைகளுள் பெரிது கைகேயி மனமாற்றம். கவிச்சக்ரவர்த்தி கம்பன் இந்தக் காவியத் திருப்புமுனையைக் கையாளும் அழகு, ஈடு இணையற்ற பெருஞ்சிறப்புக்குரியது. கல் சிற்பத்தில், மயிர்க்காம்புகள் செதுக்கும் நுட்பம் போன்றது. காப்பியத்தலைவன் இராமன்; அவன் உயர்பண்புகளின் உறைவிடம். இராமன்மேல் உயிரையே வைத்திருக்கும் தசரதன்வாய்மைக்கு ஒருவன், இராமனை வளர்த்து ஆளாக்கியவளோ அரசரில் பிறந்து, அரசரில் புகுந்து தெய்வக்கற்பினளாகிய கைகேயி! (தொடரும்)

மணிக்கடலில் முகந்த சில முத்துக்கள்

வித்துவான் திருமதி. பி. நீலா, எம். ஏ., எம். ஃபில்.,
தருமபுரம்.

(மலர் 49, இதழ் 2, பக்கம் 86 இன் தொடர்ச்சி)

காதல் படுத்தும் பாடு :

காதலன், காதலி இருவரில் ஒருவர் மற்றவரிடமிருந்து செய்தியையோ பொருளையோ பெற்றால் அவரையே நேரில் கண்டது போல் மனம் நெகிழ்வர். பொருளாக இருந்தால் அவனாகவே அதனைக்கருதித் தழுவலும், மோத்தலும், பலமுறை அணைத்தலும் செய்வர் மகளிர் என்பதைப் பல இலக்கியங்களும் கூறுகின்றன.

மாந்தழையைத் தலைவன் தந்தபோது - தலைவியின் செயல்களைக் கவனித்த தோழி 'நீயாக அல்லது மாந்தழையாக நினைந்திலளே' - என்று கூறுவதாகக் கோவை நூல் (தஞ்சைவாணன் கோவை) கூறும். அப்படிப்போலச் சிந்தாமணியில் குணமாலை சீவகனிடம் அனுப்பிய கிளி திரும்பி வந்த போது - அதனை அவள் கண்டு-நீள உயிர்த்து-கை தொழுது-வயிற்றுடன் சேர அணைத்து ஆனந்தம் கொள்கிறாள் என்கிறார் தேவர். காதலியின் மெய்ப்பாடுகளை வரிசையாகப் பார்க்கலாம்.

கண்டாள் நெடிதுயிர்த்தாள் கைதொழுதாள் கையகத்தே
கொண்டாள் திணைக்குரல்தான் சூடினாள் தாழ்குழன்மேல்
நுண்டாரிப் பசுங்கிளியை நோவ அகட்டொடுக்கி
வண்டாரான் செவ்விவாய்க் கேட்டாள்தன் மெய்ம்
[மகிழ்ந்தாள். (சிந் 1039)

கம்பர் அசோகவனத்திலிருந்த சீதை இராமனின் மோதிரம்கண்டு இதே போன்ற மெய்ப்பாடுகளைக் காட்டி மகிழ்ந்ததாகக் கூறினார். அனுமன் தந்த மோதிரத்தை

வாங்கினள் முலைக்குவையில் வைத்தனள் சிரத்தால்
தாங்கினள் மலர்க்கண் மிசை ஒற்றினள் தடந்தோள்
வீங்கினள் மெலிந்தனள் குளிர்ந்தனள் வெதும்போடு
ஏங்கினள் உயிர்த்தனள் இன்னதென லாமே. (கம். 5293)

இராமனாகவே உணர்ந்த இனிமையைப் பாடல் சொல்கிறது.

பெயர் எழுதிய மோதிரம் :

தலைவன் தன் பெயரைத் தன் மோதிரத்தில் எழுதியிருப்பான் என்பது சிந்தாமணியால் தெரிகிறது. சுருவே எழுதப்பட்டிருந்ததை அடையாளமாகக் கலித்தொகையும் (84. 23) காட்டும்.

நாம மோதிரந் தொட்டு என்பது. சிந்தாமணி. (1040) கம்பர் இராமனின் பெயர் எழுதிய மோதிரத்தைச் சீதை கண்டே மேலே கண்டவாறு மகிழ்ந்தாள் என்றார்.

மெய்ப்பேர் தீட்டியது தீட்டரிய செய்கையது
...... காட்டினன் ஓர் ஆழி வாணுதலி கண்டாள். (கம். 5290)

செவிசுடும் வார்த்தைகள் :

வார்த்தைகளின் இனிமை இன்னைமைகள் காதுக்கு இனிமையையும், துன்பத்தையும் தரும் என்பதை நாமறிவோம். விருப்பந்தரும் சொற்களைக் காதுக்குத் தேனென வருணிப்பதும், வேண்டாத சொற்களைத் தீ யென்று வருணிப்பதும் கவிமரபு.

சிந்தாமணியில் குணமாலை தன் மாமன் தன்னைப் பெண் கேட்க வந்தானென்ற சொல்லைச் செவிலி சொல்லக் கேட்டுக் காதுகளைக் கைகளால் அடைத்துக் கொண்டாள். கையால் செவிமுதல் அடைத்துச் சொன்னள் (சிந் 1048)

கம்பர் சொல்லினிமை இன்னைமைகள் இரண்டையும் எடுத்துக் காட்டுகிறார்.

செவிக்குத் தேனென இராகவன் புகழைத் திருத்தும் கவிக்கு நாயகன். என்பார் அனுமனை. சீதை, தீயவெம்சொல் செவிசுடத் தேம்புவாள் (கம். 1823) தீய்ந்தன செவிகள் (கம். 5183) என்று இராமன் காடுபுகும் போதும், இராவணனது காமப் பேச்சைக் கேட்கும் போதும் வருந்தினள்.

கவினும் கண்ணாடியும் :

அழகைப் பார்ப்பதற்குக் கண்ணாடி உதவும். சிந்தாமணி பாவைமார்க்கெல்லாம் குணமாலை கண்ணாடியாக இருந்தாள் எனப் புதுவகையில் வருணித்தது. அழகு இத்தன்மைத்தென உணர்த்துதலின் கண்ணாடி உவமையாதலை அறிக.

பாவைநின் வனப்பிற் கெல்லாம் கண்ணாடி - (சிந். 1082) கம்பர் சித்ர கூடத்தில் இராமன் சீதையை விளிக்கும் விளியில் இந்த உவமையைப் பயன்படுத்துகிறார்.

தெளிவை மார்க்கொரு கட்டளையெனச் செய்திருவே (கம். 2078) கட்டளை என்று சிறிதே இவ்வுவமை மாற்றம் பெற்றாலும் இதே உணர்வுடன் ஆளப்படுகிறது.

சொல்லாளுகை சில :

சிந்தாமணிச் சொற்களை அப்படியே கையாளும் திறம் கம்பரிடம் உண்டு. சிலவற்றை (முன்பும் பார்த்தோம். இதே தொடரில்) இப்போதும் பார்க்கலாம்.

கற்பு :

நெஞ்சுறுதியைக் குறிப்பதோடு இச்சொல் கல்விபென்ற பொருளிலும் ஆளப்பட்டது. இதற்குச் சங்க இலக்கியச் சான்று உண்டு. எழுதாக்கற்பென்று - வேதக்கல்வி குறுந்தொகையில் சுட்டப்பட்டது.

சிந்தாமணி முத்துக்கோக்கும் கல்வியறியாத இளம்பெண்களை மாதரார்கள் கற்பினுக் குடைந்த மாமணிகளைத் தெரிவையர் கோப்பர் (சிந். 1106) என்று ஆள்கிறது. கம்பர் கல்வியென்ற பொருளில்,

காலம் மேல்வினை பொருள் உணரும் கற்பிலாப்
பால, நீ இனயன பகரற் பாலையோ. (கம். 6136)

என்று வீடணன் இந்திரசித்தனை விளிக்கும் விளியாக அமைப்பார்.

வெய்ய முளைத்தண்டு சிந்1136 என்ற ஆயுதம் கம்பர்வாக்கில் எழுமுளை வயிரத்தண்டென (கம் 5678) வந்தது.

முற்றில் என்றால் சுளகு (முறம்) என்பது பொருள். (சிந் 1101) கம்பர் நாட்டுப் படலத்தில்

நுளைச்சியர், முற்றில் ஆர முகந்து தம் முன்றிலில்
சிற்றில் கோலிச் சிதறிய முத்தம் (கம் 61)

காட்டினார். ஆய் - என்பதற்கு அன்னை என்று பொருள்.

தம்மோய் எனப் படர்க்கை யிடத்தில் சிந்தாமணி கூற (சிந். 1138) கம்பர் தன்மையிடத்தில் 'ஆரணமறையோன் எந்தை அருந்ததிக்கற்பின் எம்மோய்' (கம். 2781) எனச் சூர்ப்பனகைத் தன் தாய் கேகசியைக் குறித்தாள் என்பார்.

(வளரும்)

குறிஞ்சிப் பாட்டில் மெய்யுணர்வு

வித்துவான் திரு. தா. குருசாமி

மதுரை.

முன்னுரை :

குறிஞ்சிப்பாட்டுச் சங்கப்பாட்டு. பத்துப்பாட்டில் ஒன்று. அப் பாட்டில் மெய்யுணர்வாளர்க்கு வேண்டிய பண்பும் பெயரும் சுட்டப் படுகிறது. சால்பு என்பதும், மேம்பாடு என்பதும், இயல்பு என்பதும் மெய்யுணர்வாளர்க்கு வேண்டிய பண்புகள். இப்பண்புகளை உடையவர் 'ஆசறு காட்சியர்' என்று குறிஞ்சிப்பாட்டுக் கூறுகிறது.

ஆசறு காட்சியர் யாவர் :

குற்றமற்ற காட்சியை உடையவர் ஆசறு காட்சியர், அவரே இருடிகள் எனப்படுவார்; இவர்களைப் பற்றி நச்சினார்க்கினியர் அமைதியும், மேம்பாடும், ஒழுக்கமும் என்ற மூன்று பண்புகளின் கூட்டமைப்பு உடையவர் என்று விளக்குகிறார். குற்றமற்ற அறிவினை உடைய 'தெய்வ இருடிகள்' என்றும் விதந்து உரையாசிரியர் உரைப்பார். இவரே ஆசறு காட்சியர்; இம்மெய்யுணர்வாளர் களாலும் ஒழுக்கம் அழிந்தால் புதுக்கி அதனை நிலைநிறுத்தமுடியாது என்பது குறிஞ்சிப்பாட்டின் முடிவு.

உவமைகாட்டி விளக்குதல் :

முத்து, மாணிக்கம், பொன் இவற்றால் ஆன அணிகள் கெட்டுப் போனால் அவற்றைப் புதுப்பித்து முன்போலாக்கலாம்; ஆனால் தத்தம் குணமும் ஒழுக்கமும் கெட்டால் அதனை முன்பு போல நிலைநிறுத்த தெய்வ முனிவர்களாலும் இயலாது எனக் கபிலதேவர் ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படவேண்டும் என்றகுறளுக்கு விளக்க மாகக் குறிஞ்சிப்பாட்டில் ஓதுகின்றார்.

"முத்தினும் மணியினும் பொன்னினும் அத்துணை
நேர்வருங் குரைய கலங்கெடிற் புணரும்;
சால்பும் வியப்பும் இயல்புங் குன்றின்
மாசறக் கழீஇ வயங்கு புகழ்நிறுத்தல்

ஆசறு காட்சி ஐயர்க்கும் அந்நிலை
எளிய என்னார் தொன்மறை கறிஞர் "

என்பன குறிஞ்சிப்பாட்டுத் தொடர்கள்.

திருமுறை எளிமையாக்கல் :

குறிஞ்சிப்பாட்டின் முடிவை - அரியன என்று கூறுவனவற்றை இறைவன் திருவருள் கூடினல் எளிதாக மீண்டும் பெறலாம் என்று திருமுறை எளிமை வழிகாட்டுகிறது. குற்றம் இல்லாத பெரியோர்கள் குறைபாடு செய்தால்- அதனைப் போக்கி முன்போல நிலைநிறுத்துவர் என்று திருஞானசம்பந்தர் சிந்திக்கின்ருர்.

" குற்றம் இல்லார் குறைபாடு செய்வார் பழிதீர்ப்பவர்
பெற்ற நல்ல கொடி முன்னுயர்த்த பெருமானிடம்
மற்றுநல்லார் மனத்தாலினியார் மறைகலை எலாங்
கற்று நல்லார் பிழைதெரிந்து அளிக்கும் கடற்காழியே "

என்ற சீகாழித்தேவாரப்பாடல் இறைவன் திருவருளால் அச்செயல் நிகழும் என்று சுட்டுகின்றது.

மெய்யுணர்வாளர் யார் ?

குறிஞ்சிப்பாட்டு, மெய்யுணர்வாளர் இறை ஒழுக்கத்தை முன் நிறுத்தாமல், வெற்றொழுக்கத்தை முன்நிறுத்தினர் என்கிறது. தேவாரம் இறை ஒழுக்கத்தை முன்நிறுத்தியதால் அவ்வொழுக்க முடையவர் நடவாதனவற்றையும் திருவருளால் நடத்திவைப்பர். குறிஞ்சிப்பாட்டில் 'ஆசறு காட்சியர்' என்பவர் முக்குற்றில் மட்டும் அடக்கப்பட்டனர்; ஆனல் தேவாரம் மெய்யுணர்வாளரைச் 'சேர்வார்' என்று சுட்டுகிறது. அவரின் இலக்கணம் பத்தியாகிய வித்தினை விதைத்தவர்; ஐம்புலன் வழிப்போகாதவர்; அறுவகைக் குற்றம் நீங்கியவர்; முக்குணங்களும், கரணங்களும் ஒருநெறியில் விளங்கியவர்; பரம்பொருளை என்ஞான்றும் சேர்ந்தவர் - அவரைத் தானகச் செய்யும் ஆற்றல் பெற்றவர் மெய்யுணர்வாளர் என்று திருஞானசம்பந்தர் கூறுகின்ருர்.

" பத்திப்பேர் வித்திட்டே பரந்த ஐம்புலன்கள் வாய்ப்
பாலே போகாமே காவாப் பகையறும் வகை நினைய
முத்திக்கே விக்கத்தே முடிக்கும் முக்குணங்கள் வாய்
மூடா வூடா நாலந்தக் கரணமும் ஒருநெறியாய்ச்
சித்திக்கே உய்த்திட்டுத் திகழ்ந்த மெய்ப்பரம்பொருள்
சேர்வார் தாமே தானகச் செயுமவன் உறைவிடம் "

என்பது அத்தேவாரப்பாடல்.

முரண்பாடா?

குறிஞ்சிப்பாட்டு, மெய்யுணர்வாளர்களாலும் ஒழுக்கம் தவறிய வரை நிலைநிறுத்த முடியாது என்றது; தேவாரங்காட்டும் மெய்யுணர்வாளர்கள் இறையருளால் நிலைமாறியவரை நிலைநிறுத்தமுடியும் என்றது. இவ்விரண்டும் முரண்பாடு போலத் தோற்றும்; குறிஞ்சிப்பாட்டு வெறும் உலகியலில் நின்று பாடியது; திருமுறைப்பாட்டு அருளியலில் நின்று பாடியது. இதுவே முரண்பாடு போலத் தோன்றக்காரணம்! பாரிமகளிரை மணப்புணர்க்கக் கபிலர்படாத பாடு பட்டார்; திருஞானசம்பந்தர் திருமருகலில், இறைவனை நினைந்து வருந்தி அழுத செட்டிப் பெண்ணை - விடத்தால் சிறந்த செட்டிப் பையனுக்கு - உயிர்ப்பித்து எழுப்பி மணம் புணர்த்தினார். சங்கப்புலவரில்சிலர் அரியனஎன்றவற்றை, நமது சமயாசாரியர்கள் இறைவனை முன்னிறுத்தி எளியன என்று நடத்திக் காட்டினர். அதனால் தான் அருணகிரியார் 'திருக்குறளை விஞ்சியது தேவாரம்' என்றார்.

முடிவுரை :

குற்றம் செய்யினும் குணம் எனக்கருதும் கொள்கையுடையவர் இறைவன். உலகியலில்-இறைவனை முன்னிறுத்தாத வாழ்வியலில் குற்றம் செய்தவரை அற்றம் பார்த்துக் கொற்றவனும் ஒறுத்து விடுவான். குறிஞ்சிப்பாட்டில்,

"ஆசறுகாட்சி ஐயர்க்கும் அந்நிலை
எளிய என்னார் தொன்மருங்கறிஞர்"

என்ற வரிகளைப் படிக்கும் போது, பின்னை என்பிழையைப் பொறுப்பானை - எளிவந்தபிரானை - என்ற தேவாரத் தொடர்களைச் சிந்தித்துக் குறிஞ்சிப்பாட்டின் மெய்யுணர்வுப் பூட்டினைத் திருமுறை வாக்காகிய திறவுகோலால் திறந்துமெய்ந்நெறி போற்றவேண்டும் என்பதை அறியலாம்.

EXTRACT FROM THE VISITOR'S BOOK

Dharmapuram Adhinam

Sri Vaidhyanathaswamy Devasthanam, Vaidheeswarankoil.

It was a great Privilege to worship at this great Temple.

(S-d) S. Venkataramanan,

26—1—90 Finance Secretary, Govt of India, Delhi.

முக்கனி

தமிழ் மறைக் காவலர்

திரு. கி. பழநியப்பனர், மதுரை.

தமிழகத்தில் முக்கனி என்ருல் அது வாழை, மா, பலா ஆகிய மூன்று கனிகளையே குறிக்கும். சமய இலக்கியத்தில் இவை ஒரு சிறந்த இடத்தைப் பெற்றுள்ளன. விநாயகரை "முப்பழம் நுகரும் மூஷிக வாகன" என்று ஔவைப் பிராட்டியார் போற்றுகிருர். இம்மூன்று கனிகளும் மூன்று சீரிய நெறிகளைச் சிந்தித்து உணர வைக்கின்றன.

பழம் என்ருலே வாழைப்பழத்தைத்தான் குறிக்கும். அதில் பல இனங்கள் உண்டு. அவையனைத்தும் உண்பதற்குச் சுவையானவை. மருத்துவரீதியிலும் அவை ஒரு நல்ல சத்துணவு என்று கருதப் படுவன. கைக்குழந்தை முதல் கைத்தடி ஊன்றிய கிழவர்வரை விருப்பி உண்ணக்கூடியன.

மாவோ, பலாவோ உண்டால் குழந்தைகளுக்கு மந்தமும், முதியோர்களுக்குச் செரிக்காநிலையும் ஏற்படும். ஆனல் வாழை அத்தகைய தீங்குகளைச் செய்யாது. பழத்தின் தோலை உரித்து அப்படியே சாப்பிடலாம். தோலை உரிப்பதும் மிக எளிது; அதற்கு ஒரு கத்தி தேவையில்லை,

மாங்கனியும் நல்ல சுவையுடையதே. ஆனல் வாழைப் பழத்தைப்போன்று அதன் தோலை எளிதாக உரித்துச் சாப்பிட இயலாது. அதற்குஒருகத்தி வேண்டும். அதில் உள்ள கொட்டையை உண்ண முடியாது. மா காயாக இருக்கும்பொழுது எவ்வளவு புளிப்பாக இருக்கிறதோ அது நன்ருகப் பழுத்தவுடன் அவ்வளவு இனிப்பாக மாறும்.

பலாப்பழமும் சுவையுடையதே. அதை வாழை, மா போன்று உடனே எளிதில் உண்ணமுடியாது. உருவத்திலும் மிகப்பெரிது. அதன் மேல்தோல் காடு முரடாக இருக்கும். அதனைக் கூர்வாள் கொண்டே பிளக்க முடியும். உட்புறத்திலும் சக்கை சக்கையான நார்கள் இருக்கும். அவற்றை அகற்றவேண்டுமாயின் கைகளில் எண்ணெயைத் தடவிக் கொள்ளவேண்டும். இல்லை என்ருல் அதில் உள்ள பிசின் விரல்களில் ஒட்டிக்கொள்ளும். இத்தனையும் செய்த பின்பே பலாச்சுளைகளை எடுக்க இயலும்.

ஒரு பழத்தில் பல சுளைகள் இருக்கும். ஒவ்வொரு சுளையிலும் முட்டை போன்ற சிறு கொட்டைகள் இருக்கும். சுளையைச் சுவைப் புடன் கொட்டைகளையும் சமைத்து உண்ணலாம்.

இம்மூன்று கனிகளும் தமிழகத்தில் எல்லாம் பகுதிகளிலும் கிடைக்கும்.

இனி இக்கனிகள் காட்டும் வாழ்க்கை நெறிகளைக் காண்போம்.

(1) நாயன்மார்கள், ஆழ்வார்கள் போன்ற அருளாளர்கள் பாடல்களை எளிதில் பாடலாம். எந்தநேரத்திலும் பாடலாம். ஆண் பெண் வேறுபாடின்றி எந்த வயதினரும் பாடலாம்.

நிறைமொழி மாந்தர் அருளிய அப்பாடல்கள் நமக்கு மறை மொழியாக அமைந்து பக்திச் சுவையை ஊட்டும். இவ்வாறு அவற்றைப் பாடிப் பயன்பெறுதல் வாழைப்பழத்தைச் சாப்பிடு வதற்கு ஒப்பாகும். பழத்தைச் சாப்பிடுவதற்குத் துணையாகச் சீனியோ, உப்போ தேவையில்லை. அதுபோன்றே அருட்பாடல் களைப்பாடி யாவரும் இம்மை மறுமை இன்பம் பெறலாம்.

(2) திருக்குறள், கீதைபோன்ற அறநூல்களை எப்படிக் கற்றுப் பயன்பெறவேண்டும் என்பதனை மாம்பழம் உணர்த்துகிறது.

கூர்மையான ஒரு கத்தியைக்கொண்டு மாம்பழத்தின் தோலைச் சீவிப் பழத்தை உண்டு சுவைக்கின்றோம். அதுபோன்றே அறநூல் களைத் தக்கவர்கள் துணைகொண்டு அல்லது அவர்கள் எழுதிய விளக்க நூல்களின் துணைகொண்டு கற்றுப் பொருளைச் சுவைத்து இன்புறவேண்டும். அதன் கொட்டையை மண்ணில் புதைத்து ஒரு பெரிய மாமரத்தையே உண்டாக்கிவிடலாம். இதுபோன்றே கற்ற அறநெறிகளை நம் உள்ளத்தில்புதைத்துச் சிந்தனைநீர்ஊற்றி வளர்த்தல்வேண்டும்.

(3) பலாப்பழம், புராண இதிகாசங்களை எப்படிப் படித்துப் பயன்பெறவேண்டும் என்பதை உணர்த்தும்.

பலாப்பழம் பெரிதாக இருக்கும். அதனை அப்படியே கடித்துச் சாப்பிட ஒரு பைத்தியக்காரன்கூட முயற்சிசெய்யமாட்டான். அதன் வேண்டாத பகுதிகளைத் தூக்கி எறிந்துவிட்டுச் சுளையை மட்டுமே சாப்பிடுவோம். அதுபோன்று அளவில் பெரிதான புராணங்களில் வேண்டாத பகுதிகளைத் தள்ளிவிட்டுக் காலத்திற்கு ஏற்ற நல்ல பகுதிகளையே நினைவில் கொண்டு பயன்பெறவேண்டும்.

புனிதமான புராணமாயிற்றே அதில் எதைத் தள்ளுவது என்றால், பலாப்பழத்தை அப்படியே கடித்து உண்ண முயன்றவன் கதிதான் கிட்டும். பல்லும் உடைந்து வாயும் புண்ணாகும். சுளையைச் சுவைக்கும் ஆற்றல் போய்விடும். ஆகவே அருட் பாடல்களை வாழைப்பழத்தைப் போன்றும் அறநூல்களை மாங்கனியைப் போன்றும் புராணங்களைப் பலாப்பழத்தைப் போன்றும் சுவைத்து அவற்றின் பயன்களை எளிதில்பெற்று இன்புறவேண்டுமென்பதைக் காட்டுவனவே முக்கனி என்று சொல்லலாம்.

கழற்சிங்கர், இடங்கழியார், செருத்துணையார்

வித்துவான் திரு. கா. ம. கண்ணப்பன் எம்.ஏ.,பி.எட்.,
தருமபுரம்

[தருமை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தில் 4—2—1990 ஆங்கிலமாத முதல் ஞாயிறன்று வழங்கிய அருளுபதேசத்தையொட்டி எழுதப்பெற்ற கட்டுரை.]

அன்று அடியேனைப்பொறுத்தவரை அறிவுத்திருநாள். ஞாயிற்றுக்கிழமை புத்திவளர்க்கும் சூரியனின்நாள் அல்லவா! அடியேன் விடியலிலேயே எழுந்தேன். முதல் ஞாயிறு அருளுபதேசம் பெறும் இன்ப உணர்வை எண்ணி, குளியல், வழிபாடு, உணவு முதலியவைகளை முடித்துக்கொண்டு காலை 10-00 மணிக்கெல்லாம் திருமடம் சார்ந்தேன்.

தருமை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தில் ஸ்ரீ சொக்கநாதர் வழிபாடு, திருமுறைப் பாராயணம் முதலியவைகளை நிறைவு செய்துகொண்டு சித்திராசனத்தில் அமர்ந்தார்கள். பக்தர்கள் பண்டாரக்கட்டின் உள்ளே சென்றனர். திருநீறு பெற்றணிந்தனர். திருமுறைப்பாராயணமும் நாமாவளியும் ஆயிற்று. ஸ்ரீலஸ்ரீ குருமணிகள் அருளுபதேசம் தொடங்கினார்கள். முதலில் மாதச் சிறப்பருளி அடுத்த நாயன்மார் வரலாற்றின்வழி சைவசித்தாந்த நுட்பங்களைப் புலப்படுத்தினார்கள்.

கழற்சிங்கநாயனார், இடங்கழிநாயனார், செருத்துணைநாயனார் புராணங்களைத் தத்துவச் செறிவுதோன்ற உபதேசித்தருளினார்கள்.

" கடல் சூழ்ந்த உலகெல்லாம் காக்கின்ற பெருமான்
காடவர்கோன் கழற்சிங்கன் அடியார்க்கும் அடியேன் "

என்பது சுந்தரர் செந்தமிழ். ஸ்ரீலஸ்ரீ குருமணிகள், அரிய செய்திகளை இத்திருத்தொண்டத் தொகைத் தொடர் கொண்டு உணர்த்தினார்கள். " காக்கின்ற பெருமான் " என்பது நிகழ்காலத்தில் அமைந்த பெயரெச்சத்தொடர். 'காக்கின்ற' என்ற தொடர் 'சுந்தரர் காலத்தில் வாழ்ந்தவர் கழற்சிங்கர்' என்பதைக் காட்டுகிறது. மேலும் கழற்சிங்கர் பிறநாடுகளையும் தன்னடிப்படுத்திச்

செங்கோல் ஓச்சிய பேரரசர் என்பதைக் கடல் சூழ்ந்த உலகெல்லாம் காக்கின்ற என்ற தொடர் புலப்படுத்துகிறது. காடவர்கோன் என்பது பல்லவரைக் குறிக்கும் சொல். கழற்சிங்கன் என்பது காரணப்பெயர்; வீரக் கழல் அணிந்தவன், எதிர்படையாளரிக்குச் சிங்கம் போன்ற வீரன் என்பது பொருள். இவன் யார்?-நம்முள்ளத்தில் தோன்றும் வினு இது. குருமணிகள் விடை அருள்கின்றார்கள். கழற்சிங்கன் மூன்றும் நந்திவர்மன் என்ற பல்லவவேந்தன் என்பது ஆராய்ச்சியாளர் பலரின் முடிபு.

காடவர்கோன் கழற்சிங்கன் சிவபெருமான் திருவடிகளையன்றி வேறுஒன்றையும் குறியாத சிந்தையுடையவன். ஆடகமேருவில்லார் அருளினால் வடபுலத்து அரசர்களை (சாளுக்கியர்களை) வென்றவன். இறையருளால் அறநெறி தவருது ஆட்சிபுரிந்தவன்.

இவ்வரசன் இங்ஙனம் நன்னெறி பூண்டு அரசாட்சி புரிந்து வருங்கால் சிவபெருமான் எழுந்தருளியுள்ள திருக்கோயில்கள் பலவற்றுக்கும் சென்று வழிபட்டான்; திருத்தொண்டுகள் புரிந்தான், இதுஇவ்வரசனிடம் அமைந்த உயர்நெறி. தலயாத்திரையாக ஒருமுறை திருவாரூர்க்கு வந்தான். சிவபுரம் என வழங்கும் தென் திருவாரூர் சார்ந்தான். புற்றரிடம் கொண்ட பெருமானைவணங்கப் பரிவாரங்களுடன் திருக்கோயில் நண்ணினான். வழிபாடு ஆற்றினான். உரிமைத் தேவியர்களுள்ளே ஒருத்தி; அவள்பட்டரசியும் கூட. (சமணச்சார்புடையவள் ஆதலால்) அவள்வழிபாடாற்றக்கோயிலின் உள்ளே செல்லவில்லை. ஆனால் வலம் வந்தாள்; கோயில் பெருமைகளைக் கேட்டறிந்தாள். திருமாலை கட்டும் மண்டபம் சென்றாள். கண்டாள். பூமாலை மண்டபத்தில் ஒரு புதிய பூ கீழே விழுந்து கிடந்தது. மலரைஎடுத்தாள்! மோந்தாள்! அங்கே திருமாலைகட்டும் திருத்தொண்டில் ஈடுபட்டிருந்தார் செருத்துணையார் என்ற பக்தர். அவர் அரசியின் இச்செயலைக்கண்டார். "இது சிவாபராதம்" என்று கருதினார். விரைந்து ஓடிக் கருவியை எடுத்தார். இலக்குமி போன்ற அரசியின் கூந்தலைப் பிடித்து இழுத்தார். தரையில் வீழ்த்தினார். அவள் மூக்கினை ஒருகையினால் பிடித்தார்; கருவியால் அரிந்தார். அரிந்த மூக்கில் குருதி பெருகிற்று. கரிய கூந்தல் அவிழ்ந்து கிடந்தது. அழுது அரற்றினள் அரசி.

கழற்சிங்கர் வழிபாடு ஆற்றியபின் அங்கு வந்து சேர்ந்தார். அழுது புலம்பும் தேவியைக் கண்டார். "இங்கு இக்கொடிய செயலை அஞ்சாது செய்தவர் யார்?" என வினவினார். உடனே செருத்துணையார் நிகழ்ந்தவைகளை உள்ளவாறு கூறினார்.

கழற்சிங்கர், விடைபகர்ந்த செருத்துணையாரை நோக்கி இதற்குத் தண்டனை அவ்வடைவில் (அதாவது செயல் செய்த முறையில்) அல்லவா தரவேண்டும் என்றார். மோந்ததோ மூக்கு!

முதலில் மலரை எடுத்தது கையின் செயல் அல்லவா? என்று கருதினர். உடைவாளை எடுத்தார்; மலரை மோந்து பார்க்கும் பொருட்டு எடுத்த கையைத் துணித்தார். 'மோந்தமூக்கு அறிவுக் கருவி; எடுத்தகை தொழிற்கருவி - என இடையே குருமணிகள் விளக்கம் அருளினர்கள். சேக்கிழார்,

> "கட்டிய உடைவாள் தன்னை உருவி அக்கமழ் வாசப்பூத்
> தொட்டுமுன் எடுத்த கையாம் முற்படத் துணிப்பது என்று
> பட்டமும் அணிந்து காதல் பயில்பெரும் தேவி யான
> மட்டவிழ் குழலாள் செங்கை வளையொடும் துணித்தார்
> [அன்றே"

என இந்நிகழ்ச்சியை விளக்கியருளினர். தொண்டர்களின் 'ஹரஹர' ஒலிமுழந்தது. தேவர் முழக்கமும் கூடிற்று. இத்தகு சீரிய தொண்டு புரிந்த கழற்சிங்கர் பல்லாண்டு அறநெறி அரசோச்சி இறைவன் திருவடி நீழல் எய்தினர் - இங்ஙனம் வரலாற்றைச் சுருக்கமாக அருளி வரலாற்றின் இடையிடையே பலதத்துவக் கருத்துக்களை விளக்கினர்கள்.

பட்டத்து அரசி கீழே விழுந்து கிடந்த பூவை முகர்ந்தது தவறல்ல என்பர்; மலர் மாலை கட்டும் திருப்பூ மண்டபத்தில் மலர் கீழே விழுந்தாலும் அதனை எடுத்து வழிபாட்டுக்குப் பயன்படுத்தலாம். இதனாலேயே பூவை மோந்தது குற்றம், சிவ அபராதம் எனக் கருதினர் செருத்துணையார். அதுமட்டும் அன்று. அரசன் வந்து, 'யார் இது செய்தார்' என்று கேட்டபோது நடந்ததை நடந்தவாறு கூறினர் - குருமணிகள் செருத்துணையரின் இச்செய்கையை எறிபத்தர் செயலோடு ஒப்பிட்டு அருளியமை மனங்கொள அமைந்தது. அம்மட்டோ! சிவாபராதம் நிகழுங்கால் மனம்பொறுது வலன்டுண்டு ஆற்றிய எறிபத்தர், சத்திநாயனர், செருத்துணையார் தொண்டு நெறியை ஒப்பிட்டமை சீரிய தொகுப்புநிலை ஆய்வாக அமைந்தது! மேலும் தன் ஒரேமகனென்றும் பாராமல் தேர்செலுத்தி மனுநீதி நிலைநிறுத்தி முறைசெய்த திருவாரூரில் மனைவி (தேவி) என்றும் பாராமல் கழற்சிங்கர் செயலும் நிகழ்ந்தமையை ஒப்பிட்டார்கள். இங்ஙனம் கழற்சிங்க நாயனரின் பக்திச் சிறப்பினைப் பலவாறுசிறப்பித்தார்கள். பல்லவர்கள் பொதுவாகச்சிவபக்தர்கள். இடபமுத்திரையைக் கொண்டவர்கள். கழற்சிங்கர் சீரிய சிவபக்தர் என்பதைச் சேக்கிழார் வாக்கினைக் கொண்டு இருகுறிப்புக்களால் விளக்கினர்கள்.

1. வைதிக சைவநெறி நின்று நல்லறம்காத்து மக்களை அறவழிச் செலுத்தினர்.

2. அரனார் மேவும் கோயில்கள் சென்று தக்கசெய்த்தொண்டு செய்தார்.

இத்தகு பத்திநெறியே அவர்க்குச் சிவாபராதம் செய்தவர் யாவராயினும் தண்டிக்கும் மனத்தை - உறுதிப்பாட்டை அளித்தது என விளக்கம் செய்தருளினார்கள். சிவாபராதம் செய்தாரைத் தண்டியாது விட்டால் அது பாவகாரியத்துக்குத் துணைபோவதாக அமையும் என்ற நுட்பமான சிந்தனையையும் வழங்கினார்கள்.

அடுத்து, இடங்கழியார் வரலாற்றைச் சுருக்கமாக அருளிச் சிவதத்துவக் கோட்பாடுகளைச் சுட்டினார்கள். இடங்கழியார் குறுநில மன்னர். கோனாடு இவர் ஆண்ட நாடு. இதன் தலைநகர் கொடும்பாளூர். இருக்குவேளிர் குலத்தில்தோன்றிய இடங்கழியார் இப்பகுதியை ஆண்டுவந்தார். தில்லைப்பொன்னம்பலத்து முகட்டினைக் கொங்குநாட்டுத் தங்கத்தால் வேய்ந்த ஆதித்த சோழன் மரபில் வந்தவர் இடங்கழியார். சேக்கிழார் குறிப்பிடும் இச்செய்திக்கு ஆதாரமாகத் திருத்தொண்டர் திருவந்தாதித் தொடர்களைக் குருமணிகள் குறிப்பிட்டருளினார்கள்.

" சிங்கத் துருவனைச் செற்றவன் சிற்றம்பல முகடு
கொங்கின் கனகம் அணிந்த ஆதித்தக் குலமுதலோன் "

என்பது அப்பகுதி. திருச்சிற்றம்பலம் பொன்னினால் வேயப்பட்டமை பற்றிய செய்தியை அப்பர் தேவாரம் கொண்டும் இனிது விளக்கியருளினார்கள்.

" முழுதும் வானுல கத்துள தேவர்கள்
தொழுதும் போற்றியும் தூயசெம் பொன்னினால்
எழுதி மேய்ந்தசிற் றம்பலக் கூத்தனை
இழுதை யேன்மறந் தெங்ஙனம் உய்வனே "

என்பது அப்பர் அருள் தமிழ். 'முழுதும் தூய செம்பொன்னினால் எழுதி மேய்ந்த சிற்றம்பலம்' என்ற திருவாக்குத் திருநாவுக்கரசர் காலத்தில் தில்லைச்சிற்றம்பலம் செம்பொன்னம்பலமாக நின்று நிலவியதை உறுதிப்படுத்துகிறது - என ஆய்வுரை அருளி வரலாறு தொடர்ந்தார்கள்.

இடங்கழியார் சிவனடித்தொண்டர்; புறச்சமயம் கருதாப் புனிதர். சைவ வைதிகநெறி தழைக்கச் சிவாகமநெறிப்படி திருக்கோயில் வழிபாடுகள் நிகழ ஏற்பாடுகள் செய்தார். இங்ஙனம் இடங்கழியார் சிவநெறி பரப்பும்நாளில் அவ்வூரில் தொண்டர் ஒருவர் அடியார்க்கு அமுதளிக்கும் மாகேசுவரபூசைத் தொண்டாற்றி

வந்தார். ஒருநாள் இத்தொண்டர்க்கு திருவமுது ஆக்குதற்குப் பண்டங்கள் கிடைக்கவில்லை. தம் உழைப்பினுல் பலவழிகளில் முயன்றும் பொருள் கிட்டவில்லை; வேறு ஒன்றும் அறியாது இடங்கழியாரின் நெற்பண்டாரத்தில் - காவல் நிறைந்த கொட்டகாரத்தில் - நடு இரவில் நெல் கவரப் புகுந்தார். முகந்து நெல் எடுத்தார். காவலர் இவரைக்கண்டனர்; பிடித்தனர்; இடங்கழியார் முன் கொணர்ந்தனர். இடங்கழியார் தம்முன் நின்ற அடியாரை நோக்கிக் காரணம் கேட்டார். " அத்தன் அடியாரை யான் அமுது செய்விப்பது முட்ட இத்தகைமை செய்தேன் " என்று இயம்பினுர் அடியார். இடங்கழியார் மனம் இரங்கினுர். காவலினின்றும் விடுவித்தார். " இவரன்றே பண்டாரம் எமக்கு! " என்றுர். குருமணிகள் பண்டாரம் என்னும் சொற்குப்பொருள் சேமவைப்பு, கருவூலம் - என இடையே விளக்கம் அருளினுர்கள்.

அடியாரையே தமக்குப் பண்டாரமாகக் கருதிய இடங்கழியார் "இறைவன் அடியார் நெற்பண்டாரம் அன்றி நிதிப்பண்டாரம் ஆனஎலாம் கொள்ளை முகந்து கவர்ந்து கொள்க" எனஎப் மருங்கும் பறை அறைவித்தார். சேக்கிழார் இந்நிகழ்ச்சியை அருளும்போது இடங்கழியாரைப் "படைத்த நிதிப்பயன் கொள்வார்" என்ற தொடரால் குறித்தமையைச் சுட்டியருளிச் "செல்வத்துப் பயனே ஈதல் துய்ப்பேம் எனினே தப்புந பலவே" என்ற சங்க இலக்கியத் தொடர்களோடு ஒப்பீடு செய்து மகிழ்வித்தார்கள்.

இங்ஙனம் அடியார் தங்கட்குச் செல்வம் மிக ஊட்டிய இடங்கழியார் திருநீற்றுத் திருநெறிதழைப்ப அரசோச்சிஇறைவன் மலரடிநீழல் சேர்ந்தார் - இங்ஙனம் இடங்கழி நாயனுர் அடியார் களையே செல்வமாக - சேமவைப்பாகக் கருதிய பான்மையை விளக்கிச் செருத்துணையார் புராணச்சிந்தனை நல்கினுர்கள்.

செருத்துணையார் வரலாறு கழற்சிங்கர் புராணத்தில் அறியலாகும் வரலாறே. எனினும் செருத்துணையார் பற்றிக் குறிப்புக்கள் அருளினுர்கள்.

இவர் மருகல் நாட்டுத் தஞ்சாவூரினர். இதுதற்போது கீழைத் தஞ்சாவூர் எனப்பெறுவது. இவ்வூர் நன்னிலம் வட்டம் திருமருகல் தலத்தின் தென்கிழக்கில் அமைந்தது என விளக்கித் தற்போது கீழைத் தஞ்சாவூர் என ஆட்சி வழக்கில் இப்பகுதி இருப்பது போலவே நீடிப்பது உகந்தது; ஆதார முள்ளது என்பதையும் இடையே புலப்படுத்தினுர்கள். மருகல் நாட்டுத் தஞ்சாவூரில் செருத்துணையார் வேளாண்குடி முதல்வர். இதனுலேயே சுந்தரர் செருத்துணையாரைத் 'தஞ்சைமன்னவனுர்' என்றுர். புகலிவேந்தர்

சண்பை மன்னவனும் என்பன போன்றது இத்தொடர். இவர் குறுநிலமன்னர் என்றும் திருவாரூர்க் குமரக்கோட்டத்தில் வசித்தவர் என்றும் சிலர் கூறுவர்.

செருத்தணையார் திருவாரூர் ஆழித்தேர் வித்தகர் திருக்கோயிலில் திருத்தொண்டு பலபுரிந்தார். காலந்தோறும் வழிபாடு ஆற்றினர் கழற்சிங்கர் தேவியார் பூமண்டபத்தே பூவை எடுத்து மோந்தபோது அவரை வீழ்த்தி மூக்கை அரிந்தவர். சிவ அபராதம் பொருமனத்தினர், பிறர்செய்ய அஞ்சும் இச்செயலைச் செய்தமையால் "தலைமைத் திருத்தொண்டர்" எனச் சேக்கிழாரால் போற்றப் பெற்றவர். இங்ஙனம் சிவத்தொண்டு புரிந்து இறையடி அடைந்து இறவா இன்பம் எய்தினர்.

குருமணிகள் கழற்சிங்கர், செருத்துணைநாயனர் புராணப் பகுதிகளைப் புராண ஒருமை நிலைநோக்கி ஒப்பிட்டருளினர்கள். அரசன் கோயில் வழிபாடு ஆற்றியபோது திருக்கோயில் வழிபாட்டில் கலந்துகொள்ளாமல் இருந்தாள்தேவி என்பது கழற்சிங்கர்புராணம் தரும் செய்தி. இது பற்றி ஓர் விளக்கமும் அருளிச் செய்தார்கள்.

கழற்சிங்கன் (மூன்றும் நரசிம்மவர்மன்) தேவியருள் 'சங்கா' என்ற பெயருடையவள் ஒருத்தி இருந்தாள். சமணச் சார்பும் பேரழகும் கொண்டவள் அவள். இராட்டிரகூட அரசன், அமோகவர்ஷ நிருபதுங்கவர்மனின் மகள் இவள். இவள் சமணச் சார்புடையவள் ஆதலால் வழிபாட்டில் கலந்து கொள்ளாமல் கலையுணர்வு தோன்றத் திருக்கோயில் வலம் வரல், கோயிற்பகுதிகளைப் பார்வையிடல் முதலியன ஆற்றியிருக்கக் கூடும் என்பது ஆய்வாளர்களின் கருதுகோள் – என விளக்கம் அருளி ஐயப்பாடு நீக்கினர்கள்.

அன்றைய அருளுபதேசத்தில் காடவர்கோன் கழற்சிங்கர் என்ற பல்லவரின் வரலாறும் இடங்கழியார் என்ற இருக்குவேளிர் குலக்குறுநில மன்னர் வரலாறும் உபதேசித்தருளினர்கள். சுந்தரர் "தஞ்சை மன்னவனும் செருத்துணை" என செருத்துணையாரையும் அரசர்போலக் குறித்தார். அவர் வேளாண்குல முதல்வர் ஆதலால் அங்ஙனம் குறிப்பிட்டார் – என நிறைவாக அருளினர்கள்.

இனியஉபதேசம் நிறைந்தது; இன்சுவைக் கனிச்சாறு அலுவலக அன்பர்களால் மகிழ்வோடு அளிக்கப்பட்டது. பருகி இன்புற்றோம். இனியசிந்தனைகளை ஏந்தியவாறே இல்லம் ஏகினோம்.

ஆரூரான் புகழ்பரவி அருந்தொண்டு நெறிகாட்டும்
சீராரந்த குருமணிகள் செய்யதிருப் பதம்போற்றி!

வாழ்க குருமணிகள்!

செய்திகள்

ஆயில்யத் திருநாள் ஆலய வழிபாடு

தருமை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தின் ஜன்ம நட்சத்திரமாகிய ஆயில்யத்திருநாளில் தேவாரவைப்புத்தலங்களில் சிறப்பு வழிபாடுகள் நடைபெற்று வருகின்றன. சுக்கில ஆண்டு மாசி மாதம் ஆயில்ய வழிபாடு 9—3—90 வெள்ளிக்கிழமையன்று காலை 10 மணிக்குப்புலிவலம் ஸ்ரீ தக்ஷிணகோகர்ணேசுவரர் ஆலயத்திலும், 12 மணிக்குக் காட்டூர் ஸ்ரீ சுந்தரரேசுவரர் ஆலயத்திலும், மாலை 6 மணிக்குத் திருவாரூர் ஆடகேச்சுரம் திருக்கோயிலிலும் சிறப்பு வழிபாடுகள் நிகழ்ந்தன. திருவாரூர்ப் பூங்கோயில் ஆடகேசுரத்தில் சொற்பொழிவு நிகழ்ச்சி நடைபெற்றது. மாலை 5 மணிக்குத் திருமுறைக்கலாநிதி திருஞானசம்பந்ததேசிகர் திருமுறை ஓதினார். திருப்பணிச்செம்மல் திருவாரூர் மைதீன் திரு. கோவிந்தராசன் அவர்கள் தொடக்கவுரை ஆற்றினார். திருவாரூர் திரு. வி. க. கல்லூரிப் பேராசிரியர் டாக்டர் திரு. ச. சிதம்பரம் அவர்கள் தலைமையுரை ஆற்றினார். திருவாரூர் புலவர் திரு. கோவி. தியாகராசன் எம். ஏ. அவர்களும் புலவர் திரு. சந்திரசேகரன் எம். ஏ. அவர்களும் சிறப்புரையாற்றினர். புலவர் திரு. சு. மு. சுந்தரராசன் எம். ஏ. பி. எட். நன்றியுரை கூறினார். அன்பர்கள் தரிசித்தும் சொற்பொழிவுகளைக் கேட்டும் பயன்பெற்றனர்.

குருவருளும் அருளுபதேசமும்

தருமை ஆதீனத் திருமடத்தில் ஆங்கிலமாத முதல்ஞாயிற்றுக் கிழமைதோறும் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தை அன்பர்கள் வழிபட்டு அருளுபதேசம் பெறும் பிரார்த்தனைக் கூட்டம் நிகழ்ந்து வருகின்றது. இம்மாதம் 104 ஆவது அருளுபதேசம் 4—3—90 அன்று காலை 10 மணியளவில் தொடங்கித் திருமுறைப்பாராயணம் முதலிய அங்கங்களுடன் சிறப்பாக நடைபெற்றது. தருமை ஆதீனம் அனைத்துலக சைவ சித்தாந்த ஆராய்ச்சி நிறுவனப் பேராசிரியர் டாக்டர் திரு. கு. சுந்தரமூர்த்தி எம். ஏ., தொல்காப்பிய அமைப்பும் அழகும் பற்றி விளக்கம் செய்தார்கள்.

ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் திருத்தொண்டர் புராணச் சிந்தனை அருளும் வகையில் புகழ்த்துணை நாயனார், கோட்புலி

நாயனார் புராண உபதேசம் செய்தார்கள். புகழ்த்துணையார், கோட்புலியார் வரலாற்றுக் குறிப்புக்கள் தேவாரத் திருப்பதிகங்களில் குறிப்பிடப்பட்டிருத்தலைச் சுட்டியும் அவர்களது பத்திமை மாண்பு பற்றி விளக்கியும் உபதேசித்தார்கள். ஆதீன அடியார்கள், அன்பர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் கலந்து கொண்டு பயன் பெற்றனர்.

அடுத்து 105 ஆவது அருளுபதேசம் 1—4—90 அன்று மாலை நடைபெறும். அன்பர்கள் கலந்துகொண்டு பயன்பெறுவாராக.

தருமை ஆதீனம் வேதசிவாகம பாடசாலையில், திருவுருவப்படத் திறப்பு விழா

தருமை ஆதீனம் வேதசிவாகம பாடசாலையில் தலைமை ஆசிரியராய் 1942 ஆம் ஆண்டு பொறுப்பேற்று 1989 ஆம் ஆண்டு வரை 47 ஆண்டுகள் பணியாற்றிப் பலநூறு மாணவர்களை உருவாக்கிச் சிவாகமப் பயிற்சியிலும் செய்முறைக் கிரியைகளிலும் தேர்ச்சியுறச் செய்தவர் சிவஸ்ரீ எஸ். சுவாமிநாத சிவாசாரியார். தருமைஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களாலும்மற்றும் பல நிறுவனங்களாலும் பல பட்டங்களும், விருதுகளும், பரிசுகளும் பெற்ற சிறப்புடையவர். இவர்கள் இறைவனடி கூடிய முதலாம் ஆண்டு நினைவு அஞ்சலியாக அவர்களிடம் பயின்ற மாணவர்கள் அவரது திருவுருவப் படத்திறப்புவிழா தருமை ஆதீன வேத சிவாகம பாடசாலையில் 5—3—90 திங்கட்கிழமை மாலை 6 மணியளவில் தருமை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அருளாசியுடன் நடைபெற்றது.

தருமை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தில் ஆசியருளினார்கள். கயிலைமாமுனிவர் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகள் அருளுரை வழங்கினார்கள். பாடசாலையிற் பயின்ற சிவாசாரியப் பெருமக்கள் கலந்துகொண்டனர் திருக்கோலக்கா சிவஸ்ரீ என். இராமநாத சிவாசாரியார், திருவாடானை சிவஸ்ரீ ஐயாமணிசிவம், திருக்கடவூர் டி. ஆர். விஸ்வநாதகுருக்கள், மயிலாடுதுறை சிவஸ்ரீ சேதுகுருக்கள், ஆச்சாள்புரம் சிவஸ்ரீ ஞானஸ்கந்த சிவாசாரியார் ஆகியோர் உரை நிகழ்த்தினர். பாடசாலைத் தலைமை ஆசிரியர் வரவேற்புரை வழங்கினார். ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தில் திரு. எஸ். சுவாமிநாத சிவாசாரியார் குடும்பத்தினருக்குச் சிறப்புச் செய்தருளினார்கள்.

திருக்குறுக்கையில் மாசிமக ஏகதின உற்சவம்

தருமை ஆதீனத்திற்குச் சொந்தமானதும் அட்டவீரட்டத் தலங்களில் காமனை எரித்த ஐதிகத் தலமும் ஆகிய திருக்குறுக்கை

அருள்மிகு ஞானம்பிகை உடனுகிய அருள்மிகு வீரட்டேசுவரசுவாமி தேவஸ்தானத்தில் நிகழும் சுக்கில ஆண்டு மாசித்திங்கள் 27 ஆம் நாள் (10—3—90) மாசிமக ஏகதின உற்சவம் மிகச் சிறப்பாக நடைபெற்றது. ஸ்ரீ காமதகனமூர்த்திக்கும் பஞ்சமூர்த்திகளுக்கும் விசேஷ அபிஷேக அலங்கார ஆராதனைகள் நடைபெற்றன. இரவு பஞ்சமூர்த்திகள் திருவீதி உலாக் காட்சி நடைபெற்றது. பக்தர்கள் தரிசித்துப் பயன்பெற்றன.

திருக்குவளையில் நெல் மகோற்சவம்

தருமை ஆதீனத்திற்குச் சொந்தமான திருக்குவளை எனவழங்கும் திருக்கோளிலி ஸ்ரீ தியாகராஜசுவாமி தேவஸ்தானத்தில் 8—3—90 முதல் தொடங்கி நெல் மகோற்சவம் மிகச் சிறப்பாக நடைபெற்றது. கோளிலிப்பெருமான் வீற்றிருந்தருளும் ஆலயத்தில் ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்குக் குண்டையூர்கிழார் தந்தருளிய நெல்மலையைச் சுவாமிகள் ஆரூரருக்கு அட்டித்தருமாறு ஆளிட வேண்டிக் கொண்ட வணணம் இறைவன் ஆணையால் பூதங்கள் எடுத்துச் சென்றமை முதலிய அற்புத வைபங்கள் இம்மகோற்சவத்தில் நடைபெற்றன.

திருபுவனத்தில் குருபூஜை விழா

தருமை ஆதீனம் பதினேழாவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ மாணிக்கவாசக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் குருபூஜை விழா 13—2—90 செவ்வாய்க்கிழமையன்று திருபுவனம் சந்நிதி வீதியில் உள்ள குருமூர்த்த ஆலயத்தில் மிகச்சிறப்பாக நடைபெற்றது. காலை, மாலை இருவேளைகளிலும் விசேஷ அபிஷேக ஆராதனைகள் நடைபெற்றன. நண்பகல் மாகேசுவர பூஜை நிகழ்ந்தது. மாலை 6 மணி அளவில் தருமபுரம் ஆதீனம் கலைக் கல்லூரிப் பேராசிரியர் டாக்டர் திரு. மு. சிவச்சந்திரன், எம். ஏ., பி. எட்., பிஎச். டி., குருவழிபாடு என்னும் பொருளில் விரிவுரை நிகழ்த்தினர். அன்பர்கள் குருவழிபாடு ஆற்றியும் சொற்பொழிவு கேட்டும் பயன்பெற்றனர்.

❋ எதிர்காலம் ❋

ஜோதிஷம் திரு. A. இராசமாணிக்கம்

ஓய்வுபெற்ற ஆசிரியர்

ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் நடுநிலைப்பள்ளி, திருப்பனந்தாள்.

(சுக்கிலஹு பங்குனிமீ 1உ முதல் 31உ முடிய)
(14—3—1990 முதல் 13—4—1990 முடிய)

சுக்கிலஹு பங்குனிமீ 1உ புதவாரம் சித்திரை நக்ஷத்திரம் துலாச்சந்திரனுகிய தினத்தில் பத்திரை கரணம் கூடிய காலத்தில் சூரிய உதயம் முதல் 27 நாழிகை 21 விநாடிக்கு சிம்மலக்கினத்தில் ஸ்ரீ உலகரட்சகரான சூரிய பகவான் கும்பராசியினின்றும் மீனராசி சங்கிரமணமாகப் பங்குனி மாதம் பிரவேசம் செய்தருளுகின்ருர். அன்று ஷடசீதி புண்ணியகாலம். பங்குனி மாதம் 14 தேதி மங்கள வாரம் சைத்திரசுக்த பிரதமை அன்று சாந்திரமான வருஷாரம்பம். அன்றைய வாராதிபதி செவ்வாய் பகவான் கலியுகம் 5091 பிரமோதூத வருஷத்திற்கு இராஜாவாகத் திகழ்கின்ருர். சங்கிரமண கால கிரகஸ்திதியில் இம்மாதம் செவ்வாய் பகவான் உச்ச ஸ்தானத்தில் பலம் பெற்றுள்ளார். மற்றவை கிரகஸ்திதியும் உலகபாலிப்பிற்கு அருள்கின்றன. அதனுல் உலக நாடுகளில் அரசர்களுக்குள் யுத்த ஆரவாரம், உள்நாட்டுக்கலகம்வன்முறைச்சம்பவங்கள் அனைத்திற்கும் ஆன்ருேர்களால் நல்ல தீர்வு ஏற்படும். ஸ்திரி ஜனங்கள், சாதுக்கள், அந்தணர்களுக்கு இரக்ஷகம் ஏற்படும். துஷ்டநிக்ரக சிஷ்டபரிபாலனதிகளில் உலகில் நேர்மை நிலவும். சர்வேஸ்வரர் அருளிய தேசங்களில் எங்கும் அரச பரிபாலனததில் பிரஜா சம்ரக்ஷணம் வெகுவாக ஏற்பட்டு மக்கள் அனைவரும் அமைதியில் நல்வாழ்க்கை நடத்தி வருவர். உலகெங்கும் உள்ள திருமடங்கள் ஆசாரிய பீடங்களில் மகாஉத்தமசீல ஈஸ்வர சித்த மகான்களாகத் திகழ்கின்ற சிவாராஜ யோகத்தில் உள்ள சிவஞான குருமகான்கள் ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானங்கள், ஜெகத்குருமகான்கள் உலகபிரஜைகளுக்கு ஈஸ்வர தியானத்தினுல் நலன்கள், எண்ண விருத்தியில் ஏற்படுகின்ற மறுபிறவி நீக்கம், மறுமையிலடையும் பலன் ஆகியவை தம்திருவாய் மலர்ந்து உபாக்கியானம் செய்தருள்வார்கள். திருச்சபையில் கூடும் எல்லா பக்தர்களுக்கும் மகாபிரசாதம் வழங்கி ஆசியருள்வார்கள். தேசங்களில் எங்கும் தேவாலயங்களில் நித்தியம் ஆறுகாலபூசைகள் சிறப்பு தெய்வ ஆராதனைகள் உற்சவங்கள் நடைபெற்றுவரும். மாந்தர்கள் தெய்வபக்திமிகுந்து செம்மையடைவர்; உறுதி மனப்பாங்கில் நற்கிரியைகள் புரிந்து களங்கமற்ற தோற்றத்தில் தன்னெறி கடைப்பிடித்து, சீரிய வாழ்க்கையில் உயர்வார்கள்.

1 மேஷம் :- அசுவதி - பரணி - கார்த்திகை ¼

மேஷராசி 9 பாதங்களும் சுபபலன் தரும். நல்லபணவருமானம் வந்து நிறையும். அரசுஊண்யம் நல்லசைங்கரியங்களில் செலவினமும் ஏற்கும். மார்ச்சு 29 தேதியில் தெய்வ பலனுல் நல்லன ஏற்படும். அரசுலிகிதங்கள் எழுத்துமூல விஷயங்களில் நல்லன ஏற்பட்டுவரும். சுக்கிரன் பலனில் ஏப்ரல் 2 இல் பசுபால் பிராப்தி நல்ல வாகனம் வாங்குதல் பிராப்தியளிக்கும். எல்லாக்காரியங்களும் ஜெயப்பிராப்தியாக நடந்தேறும். தாரம் புத்திரர்களுக்கு சௌக்கியம் தரும். மார்ச்சு 17, 18, ஏப்ரல் 13 இத்தேதிகள் சந்திராஷ்டமம். புதன், வியாழன் சுபம்.

2 ரிஷபம் :- கார்த்திகை ¾ - உரோகிணி - மிருகசீரிஷம் ½

ரிஷபராசி 9 பாதங்களும் சுபபலனாக நடக்கும். பணவருமானம் வெகுவாக வரும். வித்தியா வியாபாராதிகளில கலைத்துறையில் அரசாங்க நன்மைகளை ஏற்படுத்தி தரும். பொருளாதாரம் க்ஷேம நல வைப்புகளில் மார்ச்சு 31 இல் நல்ல ஸ்திதியை ஏற்படுத்தும். புத்திரரின் செய்தொழில் உத்தியோகத்தில் விளம்பரம் முதலீடு செய்வதற்கு நல்ல ஏற்பாடு நடந்துகொண்டிருக்கும். இம்மாதம் கிரகமாலிகை நேருவதினின்றும் எல்லாக்காரியங்களையும் நல்ல விதத்தில் நடத்த தெய்வபலம் இருந்துவரும் தாம்பத்திய வாழ்வில் சௌகரியங்கள் நிலவும். மார்ச்சு 19, 20, 21 தேதிகள் சந்திராஷ்டமம். வெள்ளி, சனி சுபம்.

3. மிதுனம் :- மிருகசீரிஷம் ½ - திருவாதிரை - புனர்பூசம் ¾

மிதுனராசி 9 பாதங்களும் சுபபலனாக நடக்கும். பணவருமானம் வெகுவாக வரும். வித்துவத்துவம் கலைத்துறைகளில் மார்ச்சு 29 தேதியின் மேல் விசேஷ நன்மைகள் உண்டாகும். பொன் மணி பூஷணம் தரும். எல்லாக்காரியங்களும் இஷ்டசித்தியில் வெற்றியாக நடந்துவரும். வாகனசுகம் திருப்தியளிக்கும். அரசாங்க கடிதம் வந்து மன சந்துஷ்டியளிக்கும். தாரம் புத்திரர்களுக்கு சௌக்கிய பலன் தரும். மார்ச்சு 22, 23 தேதிகள் சந்திராஷ்டமம். ஞாயிறு, திங்கள் சுபம்.

4 கடகம் :- புனர்பூசம் ¼ - பூசம் - ஆயில்யம்.

கடகராசி 9 பாதங்களும் சுப பலன் தரும். பணவருமானம் அதிகம்தரும். மார்ச்சு 29 தேதியில் வித்துவத்துவம் கலைத்துறையில் சிறப்பையும் மதிநுட்பகாரிய சாதனையையும்உண்டுபண்ணும். நல்ல வாகனம் தரும். வருங்காலத்தை முன்னறியும் ஞானம் தரும். சுயநல மின்மையில் எல்லாக் காரியங்களையும் வெற்றியாக நடத்தும். தாம்பத்திய வாழ்க்கை இல்லற தர்மம் தெய்வபக்தியில் திளைக்கும். மார்ச்சு 24, 25 தேதிகள் சந்திராஷ்டமம். புதன், வியாழன் சுபம்.

5. சிம்மம் :- மகம் - பூரம் - உத்திரம் ¼

சிம்மராசி 9 பாதங்களும் மிச்சிர பலனாக நடக்கும். பண வருமானம் அரசுகன்யமாகவரும். வித்துவத்துவம் கலைத்துறையில் நற்பலனை உண்டுபண்ணும். பூர்வபொருள்பிராப்தியில்பிரயோஜனம் வரும். ஓர் இயந்திரசாதனம் அனுபோகபிராப்திக்கு வரும். புத்திரர் பௌத்திரர்களின் சௌக்கியம் நன்றாக இருந்துவரும். எல்லாக் காரியங்களும் வெற்றியாக நடந்துவரும். தாம்பத்திய வாழ்வில் சௌக்கியம் தரும். மார்ச்சு 26, 27 தேதிகள் சந்திராஷ்டமம். வெள்ளி, சனி சுபம்.

6. கன்னி :- உத்திரம் ¾ - ஹஸ்தம் - சித்திரை ½

கன்னியாராசி 9 பாதங்களும் மிச்சிர பலனாக நடக்கும். பண வருமானம் திருப்திகரமாக வந்துகொண்டிருக்கும். மார்ச்சு 30தேதியில் வித்துவத்துவம் கலைத்துறையில்செய்தொழில்உத்தியோகத்தில் நல்லன ஏற்பட்டுவரும். மதிநுட்பமாக எல்லாக்காரியங்களையும் செயல் படுத்தும். ஸ்ரீ சுப்பிரமணியருக்கு அருச்சனைசெய்வதால் வயிற்று நலிவு நீங்கும். புத்திரரால் ஏற்படும் பூசல் ஆயாசம் நீங்கும், மன அமைதியளிக்கும். தனபாக்கிய விருத்தி ஏற்பட்டு சுபிட்சம்தரும். மார்ச்சு 28, 29 தேதிகள் சந்திராஷ்டமம். ஞாயிறு, திங்கள் சுபம்.

7. துலாம் :- சித்திரை ½ - சுவாதி - விசாகம் ¾

துலாராசி 9 பாதங்களும் சுபமான பலனைத் தரும். பண வருமானம் நல்லவகையில் வந்துகொண்டிருக்கும். வித்துவத்துவம் கலைத்துறைகளில் சிறப்பளிக்கும். செய்தொழில் உத்தியோகத்தில் முன்னேற்ற ஸ்திதியும் பதவி உயர்வும் ஆகும். அரசாங்க விகிதம் வந்து மகிழ்ச்சியளிக்கும். இயந்திர சாதனங்களில் அபிவிருத்தி ஏற்படும் உற்றவர் அல்லது நெருங்கியவர் ஒருவர் மிச்சிரமாக இருப்பினும் சமயத்தில் பகிரங்க ஒற்றுமையில் சிறப்புச் செய்வர். தாரம் புத்திரர்களின் சௌக்கியம் நன்றாக இருந்துவரும். மார்ச்சு 31, ஏப்ரல் 1 இத்தேதிகள் சந்திராஷ்டமம். புதன், வியாழன் சுபம்.

8. விருச்சிகம் :- விசாகம் ¼ - அனுஷம் - கேட்டை

விருச்சிக ராசி 9 பாதங்களும் மிச்சிரபலனாக நடக்கும். பணவருமானம் வரும், திட்டமிட்ட செலவினமும் ஆகும். ஆபரணம் வாங்கும் பிராப்தியாகும். மார்ச்சு 29 தேதியின் மேல் அரசாங் கத்திலிருந்து நற்செய்தி வரும். ஓர் நல்ல வாகனம்தரும். எல்லாப் பொது நலக் காரியங்களும் மனோ வல்லமையில் சிறப்பாக நடத்த இயலும். புத்திரர்களின் கல்வி கலைகளில் உயர்வு தரும், தாம்பத்திய வாழ்வில் மன ஒற்றுமையில் சாஸ்திரோக்த இல்லற தர்மம் நடத்தும். ஏப்ரல் 2, 3, தேதியில் சந்திராஷ்டமம். வெள்ளி சனி சுபம்.

9. தனுசு :- மூலம் - பூராடம் - உத்திராடம் ¼

தனுர் ராசி 9 பாதங்களும் மிச்சிரபலனாக நடக்கும். பணவருமானம் வெகுவாக வரும். நல்ல வகை செலவினமும் ஆகும். மற்றவருக்கு உறுதி வாக்களிக்கும், யதார்த்தமாக விஷயம் வெளியிடுதலினின்றும் ஓர்சர்ச்சை வரும். பின் வெற்றிபலன் தரும். வித்துவத்துவம் கலைத்துறையில் செய் தொழில் உத்தியோகத்தில் அரசு லிகிதம் வந்து நல்லன ஏற்படும். மார்ச்சு 30 தேதியில் ஓர் நவீன பொருள் பிராப்தியையளிக்கும். புத்திரருக்கு ஏப்ரல் 12ல் விசேஷ தன்மையளிக்கும். தாம்பத்திய வாழ்க்கை தெய்வ பக்தியில் தான தர்மத்துடன் நடந்துவரும். ஏப்ரல் 4, 5. தேதிகள் சந்திராஷ்டமம். மார்ச்சு 17, 18, பொருட் செலவு. ஞாயிறு, திங்கள் சுபம்.

10. மகரம் :- உத்திராடம் ¾ - திருவோணம் - அவிட்டம் ½

மகரராசி 9 பாதங்களும் சுப பலன் தரும். பணவருமானம் வெகுவாக வரும். வித்துவத்துவம் கலைத்துறையில் பிரசித்த நிலைமையும் எழுத்துமூல விஷயங்களில் மார்ச்சு 29 இல் நற்பலன் வருதலும் ஆகும். ஓர் நவீன பொருள் பிராப்தியளிக்கும். புத்திரர், பௌத்திரர்களின் சௌக்கியம் முன்னேற்றம் சந்துஷ்டி நிலைமையாகும். முயற்சித்துள்ள எல்லா முக்கியக் காரியங்களும் நல்லவர் மேலோர் அனுசரணையில் நன்றாக நடந்துவரும். தாம்பத்திய வாழ்வில் சுமுகம் நிலவும். ஏப்ரல் 6, 7 தேதிகள் சந்திராஷ்டமம். மார்ச்சு 20, 21 தேதிகள் பொருட்செலவு. செவ்வாய், புதன் சுபம்.

11. கும்பம் :- அவிட்டம் ½ - சதயம் - பூரட்டாதி ¾

கும்பராசி 9 பாதங்களும் மிச்சிர பலனாக நடக்கும். பணவருமானம் கண்ய ஸ்திதிக்கு ஏற்ப வரவாகிக் கொண்டிருக்கும். சகோதரர் நலம் குல சம்பிரதாய விஷயங்களில் ஸ்திரிவழியினரில் அவசிய செலவினங்களை ஏற்கும். ஏப்ரலில் ஓர் வாகனம் வாங்கும் பிராப்தியளிக்கும். புத்திரர்களின் கல்வி, கலை, தொழில் உத்தியோகத்தில் உயர் ஸ்திதியாகும். தாம் ஏப்ரல் 12இல் ஓர் நல்ல சாதனையை ஏற்படுத்தும். ஏப்ரல் 8, 9, 10 தேதிகள் சந்திராஷ்டமம். புதன், வியாழன் சுபம்.

12. மீனம் :- பூரட்டாதி ¼ - உத்திரட்டாதி - ரேவதி.

மீனராசி 9 பாதங்களும் மிச்சிரபலனாக நடக்கும். பணவருமானம் மூன்று வகையில் வரவாகும். வித்தியா வியாபாராதிகளில் கலைத்துறையில் நற்பலன் வரும். சபாபிரசங்கம் புகழ்வருதல் வாக்கு பலிதம், லிகிதம் வந்து நன்மை உண்டாகுதல், ஆகிய நற்பலன் தரும். சிரோபாதை, கண்எரிச்சல்போன்றநலிவுநீங்கி ஆரோக்கியம் தரும். சுக்கிரன் நிலையில் டாம்பீக கௌரவம் தன் சௌகரியம், சார்ந்தவர் சௌகரியம் பேணும். தாம்பத்திய வாழ்வில் சொகுசு நிலைமை சந்துஷ்டி ஆகும். மார்ச்சு 14, 15, 16, ஏப்ரல் 11, 12 தேதிகள் சந்திராஷ்டமம். வெள்ளி, சனி சுபம்.

GNANASAMBANDAM MAGAZINE

Statement about the ownership and other Particulars of the magazine

Form IV

1.	Place of publication	-	Dharmapuram
2.	Periodicity of its Publication	-	Monthly
3.	Printer's and Publisher's Name	-	V. Ramaiah Pillai
	Nationality	-	Indian
	Address	-	West Street, Dharmapuram,
		-	Mayiladuthurai - 609 001.
4.	Editor's Name	-	Vidwan Srimath Ramalinga Thambiran Swamigal.
	Nationality	-	Indian
	Address	-	Velur Devasthanam, Vaithiswarankoil - 609 117.
5.	Names & addresses of Individuals who own the Newspaper, and Partners or shareholders holding more than one percent of the total Capital		**His Holiness Sri-La-Sri Shanmuga Desika Gnana Sambanda Paramacharya Swamigal Avl** Dharmapuram Adhinam Dharmapuram Mayiladuthurai - 609 001. Tamil Nadu.

I. V. Ramaiah Pillai hereby declare that the particulars given above are true to the best of my knowledge & belief.

(S-d) **V. RAMAIAH PILLAI,**
Publisher.

Date 10—3—1990.

அனைத்துலக சைவசித்தாந்த
ஆராய்ச்சி நிறுவனம்

இதழ்வழிச் சைவ சமயக்கல்வி-VI

பாடம் - I.

ஸ்ரீ குமரகுருபரசுவாமிகள் பிரபந்தச் சிந்தனைகள் :-

கலி நீக்கிய முதற்பனுவல்

வித்துவான் திருமதி. ப. நீலா, எம். ஏ., எம். ஃபில்.,

தருமபுரம்.

அஞ்சு முகந்தோன்றில் ஆறு முகந்தோன்றும்
வெஞ்சமரில் அஞ்சலென வேல்தோன்றும்—நெஞ்சில்
ஒருகால் நினைக்கின் இருகாலுந் தோன்றும்
முருகாஎன் றோதுவார் முன்

என்ற அனுபவப் பாடல் பலரும் அறிந்ததே. சிவன் தேவர்களின் முறையீடு ஏற்று வந்து விட்டால் பின் ஆறுமுகனார் தோன்றுவது உறுதிதான். ஐந்து முகம் சிவனுடையது. கீழ்நோக்கிய அதோ முகத்தையும் கொண்டு படைத்த பிள்ளைக்கு ஆறுமுகம் அமைந்தது சிவனிடமாகவே அக்குழந்தை வரவேண்டும் எனத் தேவர்கள் அவனை வேண்டினர். அவனுக்கு ஒருபாதம்தான் சொந்தம் என்ற குறிப்பில் அது அமைந்தது. (உமையொரு கூறனுதலை எண்ணுக) ஒருகால் மேல் கொண்ட நம்பிக்கையைப் பார்த்துப் பெருமான் இருகால் கொண்ட முருகனை (பன்னிரண்டு கைகள் ஆறுதலைகள் என்றாலும் கால்கள் இரண்டே) அருளினார் என்பது பாடல் நயம்.

அம்முருகப் பெருமான் முன்னைப் பழமைக்கும் பின்னைப் புதுமைக்கும் பொருளாக ஆவதுமட்டுமன்றி முன்னை நிலையில் புதுமையாகவும் பின்னை நிலையில் பழமையாகவும் இருந்து இன்ன தன்மையன் என அறிவொணாதபடி இருக்கிறான் என்ற 'கந்தர் கலிவெண்பா' நூல்திறத்தை மூன்று கோணங்களில் இங்கே பார்க்கின்றோம்.

1. தத்துவப் பார்வை. 2. புராணப்பார்வை. 3. இலக்கியப் பார்வை என அக்கோணங்கள் அமையும்.

நூலாசிரியர் :

தாமிரபருணியாற்றின் வளம் பெருகும் பாண்டிய நாட்டின் வடகரையில் உள்ள ஸ்ரீ வைகுண்டம் அருகேயுள்ள ஸ்ரீ கைலாசம்

என்பது குமரகுருபரர் அவதரித்த தலம். சிவகாமசுந்தரியும் சண்முகசிகாமணிக் கவிராயரும் செய்த இல்லறத்தின் நற்பயனுய்த் தோன்றியவர் இவர். இறைவன் திருவுள்ளம் அறியாதார் இக் குழந்தை ஊமையென அறிந்து கலங்கினர். மோனத்தவமிருந்து அவர் பின்னே ஞானத்தமிழ் பாடப்போகிறர் என்பதையார்தாம் அறிவார்?

செந்திலாண்டவன் திருச்சந்நிதியில் உலகம்வியக்கும்வண்ணம் வாய்திறந்து தன்னுயிர்த்துணையான முருகப்பெருமானைக் கலி வெண்பாவால் ஏற்றியும் போற்றியும் வணங்கினர். சிவனடி சிந்திக்கும் ஒப்பற்ற ஞானத்தை, பவமதனை அறமாற்றும் ஓங்கிய ஞானத்தை, கலைஞானத்தால் உணர்வறியதும் உவமையில்லாதது மாகியமெய்ஞ்ஞானத்தை முருகன்இவருக்குத் தந்தான். அதனால் விளைந்த அமுதமழைதான் இந்நூல் தொடங்கி அவர்பாடியருளிய பதின்மூன்று நூல்களும் எனலாம். இவர்பாடிய நூல்கள் பதினன் கென்பதும் ஒருசாரார் கருத்து.

இவரது பாடல் தொகுப்பில் மீனுட்சியம்மை குறம், மீனுட்சி யம்மை இரட்டைமணிமாலை, சிவகாமியம்மைஇரட்டைமணிமாலை என்ற நூல்கள் இருந்தாலும் அவைகளை இவரது பாடல்களாக உ. வே. சா. எண்ணவில்லை.

இந்தக் கந்தர்கலிவெண்பா திருச்செந்தூர் முருகன்சந்நிதியில் பாடப்பெற்றது. பிற்காலத்தில் இராமன் இராமர் - கம்பன் - கம்பர் என்று 'அர்' விகுதி பெற்றுச் சிறந்தது போல கந்தன் என்பதும் கந்தர் என்று குறிக்கப்பெற்றுக் கந்தர் கலிவெண்பா - என வழங்கலாயிற்று எனக்கொள்ளுதல் வேண்டும்.

ஒவ்வொரு நூலும் எழுந்த சந்தர்ப்பங்கள் சுட்டத்தகுந்த சிறப்புடையன - அல்லது நூல்களால் விளைந்த சந்தர்ப்பங்கள் சுட்டத்தகுவன.

ஊமை நீங்க எழுந்த முதல் நூல் (கந்தர் கலிவெண்பா) மதுரை மீனுட்சி பரிசளித்த அவளுடைய பிள்ளைத்தமிழ், அநுபவப் பொருள் கேட்டு அடிமை கொண்ட ஞானச்சாரியர் மேல் பாடிய பண்டார மும்மணிக்கோவை, இந்திமொழி கைவரப் பாடிய சகலகலாவல்லிமாலை போன்ற சிறப்புக்களை அடுக்கிக் கொண்டே போகலாம்.

நூலமைப்பு :

நூற்றிருபத்திரண்டு கண்ணிகளால் நடைபயின்று ஈற்றடி முச்சீராய் நிறைவுபெற்று, சாத்திர - புராண-இலக்கிய மலராய்த் திகழ்கிறது. மண்ணில் வாழும் வாழ்வு பொருளுடையதாக அமைய

இந்நூல் வழிகாட்டுகிறது. மண்ணில் பிறந்தார் பெறவேண்டிய பயனையும் திண்ணமுறக் காட்டி இந்நூல் நிறைவு பெறுகிறது. நாள்தோறும் பாராயணமாக இந்நூலை ஓதினோர் மேலான தகுதிகளைப் பெறுவார்கள் - பெற்றுள்ளார்கள் என்பதை உறுதியோடு சொல்லலாம்.

1. தத்துவப் பார்வை :

இதில் இறைவனின் தனிப்பெருமைகளுடன் முருகனின் ஆற்றல், அருள்நிலை போன்றவை காட்டப்படும். உயிர்த்தொகுதியின் அமைப்பு - அனுபவம் என்பதும் வினையின் வலிமையுடன் சிந்திக்கப்படும்.

கண்ணுதலான் கருணை :

ஆதிஅந்தம் நடுவில்லாத அறிவுப் பொருளாக இருப்பவனை 'உணர்ந்தார்க்கு உணர்வறியோன்' என்று மணிவாசகரும் சுட்டுவார். வேதங்கள் ஐயா என வோங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனை வுள்ளான் என்பதுதிருவாசகம். இவ்வரியகருத்தைக் குமரகுருபரர் சுட்டுகிறார். வாக்கு மனத்திற்கு எட்டாதவன் என்பதை வேதத்தாலும் பிரம்மாவாலும் காணமுடியவில்லை என்பதன் மூலம் காட்டுகிறார். வேதம் - வாக்குமனமுடையவன் பிரம்மா. இறைவனைத் தன்முனைப்பாலும் அறிவாலும் அறியமுடியாது என்பதைத் தான் இரண்டுமுடைய பிரம்மாவின் தோல்வி உணர்த்துகிறது.

ஒளியான திருமேனி :

ஒருநாமம் ஒருருவம் ஒன்றுமில்லாதவன் உருவங்கொள்வது நம்கருமேனி கழிக்கவந்த காரணத்தால்தான்.

உருமேனி தரித்துக் கொண்ட தென்றலு முருவிறந்த
அருமேனி யதுவும் கண்டோ மருவுரு வானபோது
திருமேனி உபயம் பெற்றோஞ் செப்பிய மூன்று மந் நந்தம்
கருமேனி கழிக்கவந்த கருணையின் வடிவு காணே.

— சித்தியார் பாடல்

யான்எனது என்ற இரண்டுபற்றுக்களும் அற்ற இடமேஇறைவன் திருவடியாகும். பேச்சற்ற பரமானந்தம் விளங்குமிடம் திருமுடி. ஞானமே அவனது திருவுரு. இச்சை, செயல், அறிவு என்பன அவனது முக்கண்கள். இப்பூமியே சந்நிதியாக இருப்பவன் என்றெல்லாம் குமரகுருபரர் வருணிக்கிறார்.

... ... — அறிவுக்கு
அனுதியாய் ஐந்தொழிற்கும் அப்புறமாய் அன்றே
மனுதிகளுக் கெட்டா வடிவாய் — இருக்கிறான்.

மேலும்

> கருவின்றி நின்ற கருவாய் அருளே
> உருவின்றி நின்ற உருவாய்த் - திரிகரணம்
> ஆகவரும் இச்சை அறிவு இயற்றலால் இலய
> போகஅதி காரப் பொருளாகி - ஏகத்து
> உருவும் அருவும் உருவருவும் ஆகிப்
> பருவ வடிவம் பலவாய்

திருமேனி கொள்கிறான். அவனருள் வடிவாய்ப் பிறந்த முருகனின் திருமேனிவருணனை திருமுகம், திருக்கைகளின் தொழிலமைப்பால் விளக்கப்படுகிறது. 37 -57 என்ற இருபது கண்ணிகள் இவ்வமைப் பிலுள்ளன.

என்று நீ அன்று நான் :

பதியினைப் போல் பசுவும் அநாதிதான். தோற்றக் கேடற்ற முழுமுதலை இவ்வகையில் நிகர்த்தாலும் சிற்றறிவுடையதும் வினை வயப்படுவதுமான இயலாமைகள் உயிருக்குண்டு என்று சாத்திரங் கள் சொல்வதையே இங்குக் குமரகுருபரரும் சுட்டுகிறார்.

ஆணவம், கன்மம், மாயை மலங்கள் உயிருக்குச் சேர்ந்தும் விலகியும் இன்ப துன்பங்களைச் செய்யும். கேவல நிலையில் உயிர்கள் வினைப்பிணிப்புண்டும், சகலநிலையில் உடல்பெற்றும், சுத்தநிலையில் இறைவனை நெருங்கியும் நிற்கும் அமைப்புடையன.

ஆணவம்மட்டுமே உடையஉயிர்களுக்குஉள்நின்றே இறைவன் தன்னை உணர்த்துவான். இருமலங்களான, ஆணவமும் கன்ம முடைய உயிர்களுக்கு நாற்றோளுடன் மான், மழுத் தாங்கி வந்து அருள்வான். மும்மலமுடையாருக்கு மானிட வடிவில் வருதலும் அருள்செய்தலும் குமரகுருபரர் தெளிவுபடக் காட்டுவன.

> கருமமலக் கட்டறுத்துக் கண்ணருள்செய்து உள்நின்று
> ஒருமலத்தார்க்கு இன்பம் உதவிப் — பெருகெழு
> மூன்றவத்தையும் கழற்றி முத்தருட னேயிருத்தி
> ஆன்றபர முத்தி அடைவித்து (32-33)

மயக்கும் மலங்கள் :

தளைப்பதால் இவைகளைத் தளை என்பர். இவ்வினைகள் காரண மாகவே நால்வகைப் பிறப்புள் எண்பத்து நான்கு நூறாயிரம் உயிர்வருக்கப் பிறப்பை உயிர்கள் எய்துகின்றன. ஆணவம் அறிவை மறைக்கும். அதன் வலிமையைக் கெடுக்க மாயை கர்மம் சேர்ந்தன. இவற்றின் கூட்டுறவால் பின்னும் நல்வினை தீவினைகள் உயிர்கள்பால் சேரும். அதற்கேற்பப் பிறப்பு இறப்புக்களும் அமையும். இந்தச் சக்கரச் சுழல்வு - அவ்வினை வலிமையைப் பொருத்து வேகமும் ஓய்வும் கொள்ளும்.

கருமமலக்கட்டு ஆணவமான படலம், விடுத்தகலாப் பாச விருள், மூத்த கருமமலம், தீர்வரிய கருமம் என்றெல்லாம்ஆசிரியர் வாக்கில் இம்மலங்கள் விளக்கம் பெறும்.

மாயை என்ற மலம் விளக்கம் செய்வதற்காகவே வந்த செய்தியைத் திருவருட்பயன் முன்பே தெளிவாக்கியுள்ளது. விடிவாமளவும் விளக்கனையது என்ற தொடர் அத்தன்மையை நன்கு விளக்குகிறது.

2. புராணப்பார்வை :

கந்தபுராணம் முருகன் வரலாற்றை முழுமையாகக் கூறும் நூல். சாத்திரநூல் கூறுவதுபோல் தத்தம் புதல்வர் தம் சொல்வழி வாராதபோது பிறரைக் கொண்டு ஒறுக்கவும் செய்வர் என்பது போல், தக்கன் வேள்விக்குச் சென்ற தேவர்கள் சூரனுல் தக்கபடி தண்டிக்கப் பட்டார்கள் - துன்பத்தின் எல்லைக்கே சென்ற பின்புதான், குமரப் பெருமானை இறைவன் தோற்றுவித்தருளினன் என்ற புராணச் செய்தி குமரகுருபரர்வாக்கிலும் இடம்பெறுகிறது

பூங்கயிலை வெற்பில் புனைமலர்ப்பூங் கோதையிடப்
பாங்குறையும் முக்கண் பரஞ்சோதி- ஆங்கொருநாள்
வெந்தகுவர்க் காற்றுத விண்ணோர் முறைக்கிரங்கி
ஐந்து முகத்தோடு அதோ முகமும்- தந்து
திருமுகங்கள் ஆறுகிச் செந்தழற்கண் ஆறும்
ஒருமுக மாய்த் தீப்பொறி ஆறு உய்ப்ப... (75-77)

சரவணத்தில் அப்பொறிகள் முருகனுக உருப்பெற்றன. கௌரிதன் திருக்கரத்தால் ஆறுருவங்களையும் இணைத்த போது ஒரு திருமேனி யாகிக் கந்தனென்ற பெயரும் கொண்டான்.

துணைவர் வந்தனர் :

உமையின் சிலம்புப்பரல் ஒன்பதும் தெரித்த போது நவமாதர் வந்தனர். அவர்கள் பால் வீரவாகுமுதலிய நவவீரர்கள் தோன்றி முருகனுக்குத் தோழர்களாயமைந்தனர்.

விருப்பால் அளித்தநவ வீரருக்குள் முன்னேன்
மருப்பாயுந் தார்வீரவாகு

எனத் அத்தலைவன் குறிக்கப்படுகிறுன்.

பிரமன் அகந்தை அடங்கியது :

நான்முகங்களாலும் வேதஞ்சொல்லும் பிரமனின் செருக்கைக் குமரன் அடக்கினன். பிரணவத்தின் பொருள் யாதென வினவ, பிரமன் விழிக்க-நான்கு தலைகளிலும் தடபடவெனக் குட்டிச்சிறையிலிட்டான் குமரன். இப்புராண நிகழ்வு

... ... படைப்போன்
அகந்தை உரைப்பமறை ஆதி எழுத்தென்று
உகந்த பிரணவத்தின் உண்மை — புகன்றிலையால்
சிட்டித் தொழிலதனை செய்வது எங்ஙன் என்றுமுனம்
குட்டிச் சிறையிருத்தும் கோமானே

என்று விளித்ததுடன் கண்ணுதல் வேண்ட அவனுக்கு நாதனுக்கு பிரமம் மொழிந்த பெம்மான் என்று போற்றுகிறார்.

நாதா குமரா நமவென் றரனார்
ஓதாய் எனவோ தியதெப் பொருள்தான்

என அருணகிரியார் கந்தரனுபூதியில் இதனைச்சுட்டுகிறார்.

தாரக சிங்கமுகவதை :

"தாரகனும் மாயத் தடங்கிரியும் துளாக
வீர வடிவேல் விடுத்தோனே"
"வாரிதனில் புதிய மாவாய்க் கிடந்தநெடும்
சூர் உடலம் கீண்ட சுடர் வேலோய்."

என்கிறார் குமரகுருபரர்.

தாரகனும்சூரனும் வேலால்மடியசிங்கமுகனைவச்சிராயுதத்தால் மாள்வித்தான். காரணம் வேலும் சிலையும் தவிர பிறபடைக் கலங்களை நீபயின்றதில்லையோவெனச் சிங்கமுகன்கேட்டதேயாகும்.

வேலினால் எறியு மாறும் வெஞ்சிலை வளைய வாங்கிக்
கோலினால் விடுத்த தொன்றைக் குறைத்திடு மாறுமல்லால்
பால நீ படைகள் வேறு பயின்ற தொன்றில சொல் என்னு
(யுத்த. சிங்க. வதை. 452)

கஞ்சமதனைய வோர் கைக் காமரு குலிசந்தன்னை
வஞ்சகன் உயிருண் டொல்லை வருகென விடுத்தான் மன்னோ
(பா- 453)

வானுப் பகைவன் முதலாய பாலருடன் சிங்க முகனை வென்று வாகை முடித்தோய் - எனக் குமரகுருபரர் காட்டுவார்.

தெய்வானை வள்ளி திருமணம் :

கிரியை இச்சை என்ற இருசக்தி களைக் கொண்டவன் என்ற தத்துவமே தெய்வானை வள்ளி திருமணங்களாகும்.

சைவக் கொழுந்தை தவக்கடலே வான்உதவும்
தெய்வக் களிற்றை மணம் செய்தோனே - பொய்விரவு
காமம் முனிந்த கலைமுனிவன் கண்ணருளால்
வாமமட மானின் வயிற்றுதித்துப் - பூமருவு

ஏனக் குறவர் களிகூரப் பூங்குயில்போல்
ஏனல் புனங்காத்து இனிதிருந்து - மேன்மைபெறத்
தெள்ளித் தினைமாவும் தேனும் பரிந்தளித்த
வள்ளிக் கொடியை மணந்தோனே - 105 - 108

3. இலக்கியப் பூஞ்சோலை :

கந்தர்கலி வெண்பா தோத்திர சாத்திரப் பெருமைகளுடன் மிகச் சிறந்த இலக்கிய மணத்தையும் பெற்றுள்ளது.

பொன்மலர் நாற்றமும் பெற்றதுபோல் இலக்கியப்பொலிவும் இந்நூல்பால் நன்கு பொருந்தியுள்ளது.

எண்ணழகு :

தொகைகளாகச் சொல்லுதலில் ஓர் அழகுண்டு. அதனை விபரம்தெரிந்தோரே விரித்துப் பொருள்செய்து கொள்ளமுடியும். அப்படி அறிவினைத் தூண்டுமுபாயவகை அடிகள் பாலமைந்துள்ளது.

இருவினை, மூன்றவத்தை, ஈரிரண்டு தோற்றம், நால்வகைச் சத்திநிபாதம், நாற்கவி, ஐந்தொழில், பஞ்சவிதரூபம், ஓதிய ஐந்து ஓங்காரம், பஞ்சமலம், ஐந்திலக்கணம், ஆறுஅத்துவா, ஆறு திருப்பதி, ஆறெழுத்து, ஏழுபிறப்பு, அட்டாவதானம், நவவீரர் என்றடுக்கி எண்ணி மகிழலாம்.

அணியழகு :

உடலுக்கு அழகைச் சேர்ப்பது போல் உவமை உருவகம் தன்மை போன்ற அணிகள் செய்யுளுக்கு அழகையும் பெருமையையும் சேர்க்கும்.

உவமைகள் :

அணிகளெல்லாம் இதிலிருந்தே தோன்றிய தெலப்பதால் இதனைத் தாய் எனக் கூறுவதுண்டு. உவமஉருபு விரிந்து வரும் அமைப்புடையது.

இந்திர சாலம் புரிவோன் யாவரையும் தான்மயக்கும்
தந்திரத்தில் சாராது சார்வது போல் (8)

இறைவனும் மாயையில் படாதுநின்று மயக்கம் செய்கிறான் என்று கூறுகிறார்.

கன்மத்துக் கிடாய்க் கறங்கும் சகடமும் போல்
சென்மித் துழலத் திரோதித்து (16)

ஒரே பிறப்பில் பலஆண்டுக் காலம் இருந்து அவதியுறுதல் கறங்கு போலவும் பலசென்மங்களாகப் பிறந்திறந்து அனுபவமுறுதல் சகடமாகவும் கொள்ள அமையும்.

உருவக அணி :

இவ்வணி உவமஉருபு மறைந்து வருவதாகும். பவளப் பொருப்பு - வெள்ளிவெற்பு, புண்டரிகம் பன்னிரண்டு, குமுதச் செவ்வாய், மலர்முகம், கமல முகம், மலர்வதனம், முகமதி, முகத் தாமரை, புயசயிலம், மலர்க்கரம், இன்பப்பொருப்பு கமலக்கால் - என அதிகமாக உருவகஅணி அமைந்துள்ளது.

குறள் பதிந்த சுவடுகள் :

திருக்குறள் சுவடுகள் காணுமாறு பல விடங்கள் இந்நூலுள் உள்ளன.

திருவடியின் பெருமை கூறும்போது அக, புறப்பற்றுக்கள் நீங்கின ஞானநிலையில் அடைவதாக அமையும் என்கிறது கலிவெண்பா.

யான் எனதென்னும் செருக்கறுப்பான் வானோர்க்
குயர்ந்த உலகம் புகும்.

என்ற குறள் கருத்தமைய

யான் எனது என்று அற்ற இடமே திருவடியா (34) விளங்கு கிறது என்கிறார் அடிகள்.

கைம்மாறு வேண்டா கடப்பாடு மாரிமாட்டு
என்னாற்றுங் கொல்லோ உலகு (குறள்)

மாரிபொழிந்த மலர்க்கரத்தால் (50) நினைக்கப்படும்.

ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று
சூழினும் தான்முந் துறும் (குறள்)

ஊழ் வினையைப் போக்கி (25) அருள்வான் முருகன்

முடிவுரை :

முருகப்பெருமான் அடியார் துன்பங்களை நீக்கிய அருமைப் பாட்டை விளக்கும் பாடலாகவே இந்நூல் அமைவதால் இம்மை மறுமை நலன்களைத் தரமுந்தும் முதல்நூலாக இது ஆகிறது. சாத்திர-புராண-இலக்கிய மணங்கமழும் இனிய தமிழ் மலர் இது என்பதில் ஐயமில்லை.

பங்குனிமாதச் சிறப்பு நாட்கள்

14—3—90 புதன், ஷடசீதி புண்ணியகாலம். காரடையான் நோன்பு.
15—3—90 வியாழன், சங்கடஹர சதுர்த்தி.
17—3—90 சனி, சீகாழி ஸ்ரீ பிரம்மபுரீசுவரருக்கு சம்வத்ஸராபிஷேகம்.
19—3—90 திங்கள், வியசிரா. காலாஷ்டமி.
22—3—90 வியாழன், சர்வ ஏகாதசி. சிரவண விரதம்.
24—3—90 சனி, சனிமகாபிரதோஷம். தண்டியடிகள் குருபூஜை.
25—3—90 ஞாயிறு, மாத சிவராத்திரி.
26—3—90 திங்கள், சர்வ அமாவாசை. பிரதக்ஷிணம். தக்ஷஸாமனு.
27—3—90 செவ்வாய், தெலுங்கு வருடப் பிறப்பு. வஸந்த நவராத்திரி.
30—3—90 வெள்ளி, கிருத்திகை விரதம். சதுர்த்தி விரதம். வேளூர் கிருத்திகை. தருமை ஸ்ரீ சண்முகர் அபிஷேகம். வேளூர், திருபுவனம், திருவையாறு முதலிய தலங்களில் பங்குனி உத்திர உற்சவ ஆரம்பம்.
31—3—90 சனி, திருவையாறு ஸ்ரீ பஞ்சநதீசுவரசுவாமிக்கு சம்வத்ஸர அபிஷேகம். நேச நாயனர் குருபூஜை.
1—4—90 ஞாயிறு, தலைஞாயிறு ஸ்ரீ குற்றபொறுத்தீசுவர சுவாமிக்கு சம்வத்ஸராபிஷேகம்.
2—4—90 திங்கள், கணநாத நாயனர் குருபூஜை.
3—4—90 செவ்வாய், பங்குனி உத்திரப் பெருவிழாவில் சகோபுர ரிஷப வாகனக் காட்சி. வேளூரில் ஸ்ரீ செல்வமுத்துக்குமாரசுவாமி ஸ்ரீ பாலாம்பிகை உடனுகிய ஸ்ரீ வைத்தியநாத சுவாமியை பூஜித்தல், பூச்செண்டு பெறுதல். திருக்கடற்குடி ஸ்ரீ உஜ்ஜீவ நாதசுவாமிசம்வத்ஸராபிஷேகம். வசந்தநவராத்திரிபூர்த்தி.
4—4—90 புதன், முனையடுவார் நாயனர் குருபூஜை. [ஸ்ரீராமநவமி.
5—4—90 வியாழன், ஆயில்யவிழா. ஏகாதசி விரதம்.
6—4—90 வெள்ளி, பங்குனி உத்திரப் பெருவிழாவில் திருத்தேர்.
7—4—90 சனி, சனிமகாபிரதோஷம்.
8—4—90 ஞாயிறு, பங்குனி உத்திரம். உருத்திரபாததீர்த்தம். திருப்பனந்தாள் ஸ்ரீ அருணஜடேசுவரசுவாமி ஸ்ரீ பிரகந்நாயகி அம்பாளுக்கு சிவபஞ்சாக்ஷர உபதேசக் காட்சி, இரவு ரிஷப வாகனக் காட்சி. தருமை 26 ஆவது குருமகாசந்நிதானம் அவர்கள் பிரமோதூத வருஷத்திய குருபூசை விழாவின் திருமுகம் ஒப்பமிட்டு பூசையில் வைத்தருளல், பௌர்ணமி விரதபூசை. பகல் தயிராபிஷேகம். பிரும்மணவர்ணிகமனு.
9—4—90 திங்கள் பௌர்ணமிவிரத பூஜையில் பசுந்தயிர் அபிஷேகம். திருநின்றியூர் ஸ்ரீ லக்ஷ்மிபுரீசுவரசுவாமிக்கும், திருமுல்லைவாயில் ஸ்ரீ முல்லைவனநாதசுவாமிக்கும் சம்வத்ஸராபிஷேகம்.
11—4—90 புதன், காரைக்காலம்மையார் குருபூஜை.
13—4—90 வெள்ளி, சங்கடஹரசதுர்த்தி. வியசிரா, மேஷரவி 47-42. தொகையடியார்கள் குருபூஜை.

GNANASAMBANDAM Regd. No. TN / M. M. 1
வெளிநாடு Regd. No. TN / M. M. 4

சிவமயம்

தருமை ஆதீனம் சிறப்பு நிகழ்ச்சிகள்

ஸ்ரீ குருஞானசம்பந்தர் பணிமன்றத்தின் சார்பில்

ஆச்சாள்புரம்

ஸ்ரீ சிவலோகத்தியாகராஜசுவாமி ஆலயத்தில்

திருமுறை வேள்வி

(மூன்றும் திருமுறை முற்றேதல்)

2–4–90 திங்கட்கிழமை காலை 8 மணி முதல் மாலை 7 மணி வரை, நடைபெறும். ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் நிறைவு அருளுரை வழங்குவார்கள். திருமுறை இசைவாணர்கள், புலவர்கள் திருமுறை விண்ணப்பம் செய்வர்.

பெரியபுராண அருளுரை

தருமை ஆதினத் திருமடத்தில்

ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள்

முதல் ஞாயிறுதோறும் வழங்கிவரும் பெரியபுராண அருளுரை 1—4—90 ஞாயிற்றுக்கிழமை மாலை 4-00 மணி முதல் 6-00 மணி வரை நிகழும்.

ஆயில்யத் திருநாள் சிறப்பு வழிபாடும் உழவாரப் பணியும்

தருமை ஸ்ரீ குருஞானசம்பந்தர் பணிமன்றச் சார்பில் 5–4–90 வியாழக்கிழமை காலை 9 மணி முதல் கீழ்வேளூருக்கு அருகிலுள்ளதும் தேவார வைப்புத் தலமும் ஆகிய ஆழியூர் ஸ்ரீ கங்காளநாதசுவாமி கோயிலில் உழவாரப்பணி நிகழும். தருமை ஆதீனம் கல்லூரி நாட்டு நலப்பணித்திட்ட மாணவர்கள் உழவாரப்பணி புரிவர். சுவாமி அம்பாளுக்கு விசேஷ அபிஷேக ஆராதனைகள் சமயச் சொற்பொழிவுகள் நடைபெறும்.

அன்பர்கள் வந்து கேட்டுப் பயனெய்துவார்களாக.

Printed & Published by V. Ramaiah Pillai, Manager, Dharmapuram, at the Gnanasambandam Press, Dharmapuram, Mayiladuthurai 10-3-90